Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 06 (01.11.2003) சனிக்கிழமை இதழ் :32

IIS

புலமைப்பரிசில் திட்டம் 2004

கல்வியாண்டு 2004/2005 இல் புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி : 15.11.2003

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடாநாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-1750)

## மாதான முயற்சியில் சந்திரிகாவின் தலையீடு;

## கப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்!

### ச்சரிக்கிறார் நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சன்



(ஒஸ்லோ)

"சமாதான முயற்சிகளில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தொடர்ந்து தலையீடு செய்வது - சமாதான முயற்சிக்கும், நோர்வேயின் பங்களிப்பிற்கும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்."

இவ்வாறு நோர்வேயின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் பீற்றர்சன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கண்காணிப்புக்குழுத் தலைவர் ஜெனரல் ரெலவ்சனை பதவி விலக்கக் கோரும் ஜனாதிபதியின் கடிதம் தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் - நோர்வேயுடன் டென்மார்க் பின்லாந்து, ஐஸ்லாந்து, சுவீடன் போன்ற ஸ்கண்டிநேவிய நாடுகளும், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் அங்கம் பெற்றுள்ளன. தற்போதைய இலங்கையின் நிலைமைகள் தொடர்பாக இந்த நாடுகளும் அவதானித்து வருகின்றன.

ஜனாதிபதியின் இவ்வாறான அறிவிப்புக்கள், அந்த நாடுகளில் இருந்துவந்து கண்காணிப்புக்குழுவில் உள்ளவர்களின் வேலையை பெருமளவில் பாதிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.






**திட்ட வரைபின் முழு விவரமும் நாளைய நமது ஈழநாட்டில்**

விடுதலைப் புலிகளால் நேற்று அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத் திட்டவரைபின் முழுவிவரங்களும் நாளைய நமது ஈழநாட்டில் வெளியிடப்படும்.

# நோர்வே தூதர் மூலமாக அரசாங்கத்திடம்

# லிகளின் திட்டவரைபு நேற்று கையளிப்பு!

(கிளிநொச்சி)

**டக்கு - கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகத்தைத் தோற்றுவிப் கான திட்டவரைபு-தமிழீழ விடுதலைப் புலிகளால் நேற்று, நோர்வே தூது ஹான்ஸ் பிறட்ஸ்கர் மூலமாக அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது.**

ளிநொச்சியிலுள்ள புலிகளின் ானச் செயலகத்தில் நேற்றுக் ல நோர்வே தூதுவர் ஹான்ஸ் ஸ்கர் - தமிழீழ அரசியற் றப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல் னச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பையடுத்து, விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகத்திட்டவரைபு 12.05 மணியளவில் நோர்வேத் தூதுவரிடம், தமிழ்ச்செல்வனால் கையளிக்கப்பட்டது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசாங்கம் சமர்ப்பித்த திட்டவரைபுக்கு பதிலாகவே புலிகளால் இந்தத் திட்டவரைபு கையளிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு பிரான்ஸிலும் பின்னர்

(10 ஆம் பக்கம் பார்க்க)



நோர்வே தூதரிடம் கையளிக்கப்படுகிறது திட்டவரைபு.

**ப்பு விவகாரங்களைக் கையாளும் அதிகாரம்**

## னாதிபதிக்கா? பாதுகாப்பு அமைச்சருக்கா?

## நீதிமன்றத் தீர்ப்பு 10 நாட்களுக்குள்!

(கொழும்பு)

டையினர் தொடர்பான நட களை மேற்கொள்வதில் க்கா, பாதுகாப்பு அமைச் நிறைவேற்று அதிகாரம் என்பது குறித்து, உயர் ம் நேற்று விசாரணைகளை ாண்டது.

ருக்கு இது தொடர்பான வற்று அதிகாரம் உள்ளது என்பதை தெளிவுபடுத்துமாறு கோரி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த மனுவின் அடிப்படையிலேயே இந்த விசாரணை நேற்று நடத்தப்பட்டது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவினால் நியமிக்கப்பட்ட ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்ற அமர்விலேயே இந்த விசா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ - 9 வீதிப் புனரமைப்பில் ஈடுபட்டிருந்த இரு சிங்களவர் துப்பாக்கியுடன் கைது!

### கிளிநொச்சியில் காவல்துறை சோதனையில் சிக்கினர்

கிளிநொச்சிப் பகுதியில் - ஏ-9 வீதியில் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த் வாகனம் ஒன்றை வழிமறித்து தமிழீழ காவல்துறையினர் நடத்திய சோதனையின்போது, அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி-56 ரக துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டதுடன் - வாகனத்தில் பயணம் செய்த தென் பகுதி சிங்களவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து தமிழீழ காவல்துறையின் நடுவப் பணியகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

கிளிநொச்சி பிரதேசத்தில் அமைந்துள்ள ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் குற்றத்தடுப்பு நடவடிக்கை

(10 ஆம் பக்கம் பார்க்க)

**'நமது ஈழநாடு' நடத்தும்**

## 5 மாணவர்களுக்கான மைப்பரிசில் கருத்தரங்கு!

(யாழ்ப்பாணம்)

து ஈழநாடு' நடத்தும், தரம் வர்களுக்கான புலமைப் பரி லவச பயிற்சிக் கருத்தரங்கு காலை 8 மணி தொடக்கம் படி உயர்தரப் பாடசாலையில் பெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்குத் தோற் மாணவர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன் பெறலாம்.

500 மாணவர்கள் மட்டுமே, இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கப்படவுள்ளதால், மாணவர்கள் குறித்த நேரத்தில் வந்து, தமது வரவை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## கண்ணிவெடி அகற்றும் பயிற்சிகளை அமெரிக்க நிபுணர் குழு வழங்குகிறது!

(கொழும்பு)

அமெரிக்க இராணுவ நிபுணர் குழு - இரண்டாவது தொகுதி இராணுவ பொறியியலாளர்களுக்கு கண்ணிவெடி அகற்றும் பயிற்சியை வழங்கி வருகிறது.

எம்பிலிப்பிட்டியாவிலுள்ள துன்கம என்ற இடத்தில் இந்தப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சிகள் அடுத்த வாரம் முடிவடையும் என்று இராணுவத் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

13 அதிகாரிகள் உட்பட 149 இராணுவப் பொறியியல் பிரிவினர் இந்தப் பயிற்சிகளைப் பெற்றுவருகின்றனர். இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.

எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

(சி -1753)

# பிரதேச செயலர் பிரிவுகளுக்கான சமுர்த்தி மகாசங்கம் அமைப்பு!

(யாழ்ப்பாணம்)

உடுவில், தெல்லிப்பளை, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கிய சமுர்த்தி மகாசங்கம் இன்று அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு உடுவில் பிரதேச செயலர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம் தலைமையில் சுன்னாகம் சிவம் கோயில் கல்யாணமண்டபத்தில் நடைபெறும்.

இந்தச் சங்கத்திற்காக உடுவில் பிரதேச செயலர் பிரிவிலிருந்து எட்டு பேரும், தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவிலிருந்து ஐந்து பேரும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலிருந்து எட்டுப் பேருமாக மொத்தம் 21 பேர் கொண்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினர் தெரிவுசெய்யப்படவுள்ளது.

இவ்வாறு தெரிவுசெய்யப்படும் அனைவரும் சமுர்த்தி சங்கங்களின் தலைவர்களிலிருந்து செயற்படுவரெனவும், இந்த மகாசங்கம் உடுவில் பிரதேச செயலர் பிரிவை மையமாகக்கொண்டு இயங்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகள் அமைப்பில் இணையச் சென்ற மாணவிகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

விடுதலைப்புலிகளின் இயக்கத்தில் இணையவந்த 18 வயதிற்கு குறைந்த இரு மாணவிகள் நேற்றுமுன்தினம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். யாழ் நல்லூர்க் கோட்ட அரசியற்துறை அலுவலகத்தில் நடை பெற்ற இந்நிகழ்வில் யுனிசெப் நிறு வன பதில் பணிப்பாளர் சேரா லென்டன், மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் பெரோஸ் சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரு மாணவிகளும் யாழ் மாவட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் கலைவிழியால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் யாழ் நல்லூர் அரசியற்துறை பொறுப்பாளர் ஈஸ்வரனும் கலந்து கொண்டனர்.

கடந்த சனிக்கிழமை யாழ் யுனிசெப் அலுவலகத்தில் விடுதலைப்புலிகளுக்கும், யுனிசெப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அதன் போது வயதில் குறைந்த சிறுவர்களை இயக்கத்தில் இணைப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (111)

டதாக தெரிவிக்கப்பட்டது. (111)


## யாழ்.வல்வை சிவகுரு வித்தியாசாலை
### வல்வெட்டித்துறை

## வருடாந்த பரிசளிப்பு விழாவும்
### பெற்றோர் தின விழாவும் -2003

இடம்:- பாடசாலை மண்டபம்
காலம்:- இன்று சனிக்கிழமை மு.ப.8.30 மணி
தலைவர்:- திரு.த.தவேந்திரராசா (அதிபர்)

**பிரதம விருந்தினர்**
திரு.க.சோ.சிவனருள்சுந்தரம் (காண்டீபன்)
(பிரபல சட்டத்தரணி, பழைய மாணவன்)

**சிறப்பு விருந்தினர்கள்**
செல்வி. செல்லம்மா நாகமுத்து
(நிர்வாக உத்தியோகத்தர் வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி)
திரு.த.அன்பழகன்
(பொறுப்பாளர், கடற்புலிகளின் அரசியற்துறை, வடமாரட்சி)

**பரிசில் வழங்கல்**
திருமதி சரஸ்வதி சிவனருள் சுந்தரம்
(முகாமையாளர், மக்கள் வங்கி, பருத்தித்துறை)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(சி-1757)

பாடசாலைச் சமூகம்
யாழ்.வல்வை சிவகுரு
வித்தியாசாலை
வல்வெட்டித்துறை



## Jaffna College Institute of Technology
### Vaddukoddai

The Following Course Commence From 2nd week of November.
part-time Course on certificate in **AutoCAD**
fees :- 2,000/=
Duration:- 4 months
For application forms and details Contact :
**Director**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai**
Tel.No :- 060221-3139 email : jcit@sltnet.lk
(சி-1756)


# சின்னஞ்சிறு செய்திகள்

### அவுஸ்திரேலிய, நியூசிலாந்து எம்.பிக்களுடன் தமிழ்க்கட்சிகள் சந்திப்பு

அவுஸ்திரேலிய தொழிற்கட்சியின் மெல்போர்ன் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரான அலர்ன் கிறவ்பின் மற்றும் நியூசிலாந்தின் கிறீன் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கீத் லொக்கி ஆகியோர் கடந்த திங்களன்று ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ்(வரதர் அணி), ஈரோஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளைக் கூட்டாகச் சந்தித்து பேச்சுநடத்தியுள்ளனர்.

இந்தப் பேச்சுக்களின்போது, வடக்கு-கிழக்கு மாகாணத்தில், தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் ஜனநாயகவிரோதச் சம்பவங்கள் பற்றி எடுத்து விளக்கப்பட்டுள்ளதுடன், வடக்கு - கிழக்கு மகாணத்தில் அரசியல் பன்மைத்துவம், ஜனநாயகம் மற்றும் அடிப்படை மனிதஉரிமை விவகாரங்கள் என்பன குறித்து தெளிவுபடுத்தப்பட்டது என ஈ.பி.டி.பி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### சந்திரிகாவுடன் ஈ.பி.டி.பி சந்திப்பு

வடக்கு-கிழக்கு மாகாணம் தொடர்ந்து ஒரே நிர்வாக அலகாகப் பேணப்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென, ஈ.பி.டி.பியின் செயலாளர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான தூதுக்குழு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்துள்ளது.

### முல்லையடி வயல் கிணறுகள் பாவனைக்குதவாத நிலையில்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரான்பற்று, முல்லையடி கிராம வயல்க் கிணறுகள் பாவனைக்குதவாத நிலையில் உள்ளது. வயல் பகுதியில் உள்ள 23க்கு மேற்பட்ட பொதுக்கிணறுகள் நாவலர் சனசமூக நிலையப் பகுதிக் குட்பட்டவை. இக்கிணறுகள் மீளப் புனரமைப்புச் செய்யாமையால் அந்தக் கிராமமக்கள் குடிநீர் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

யாழ்ப்பாணம் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் மீள்புனரமைப்பு செய்துதருமாறு பிரான்பற்று முல்லையடி கிராம மக்கள், வலி. தென்மேற்கு பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளரை கேட்டுள்ளனர். மேற்படி விடயம் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஆவன செய்துதருவதாக உள்ளூராட்சி உதவியாளர் தெரிவித்துள்ளார். (91)


**நிறைஞ்சனலஸ்** சங்கானை
எம்.ஜி.ஆர் (இருவேடம்), சறோஜாதேவி
நடித்த
**எங்க வீட்டுப்பிள்ளை**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
XXX
(சி-1752)


### வலிகாமம் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கமம்

வலிகாமக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு மானிப்பாய் பிரதேசசபை ரவீந்திரன் கலாச்சார மண்டபத்தில் இன்று மாலை இரண்டு மணிக்கு தேசிய எழுச்சிப் பேரவையின் வலிகாமக் கோட்டச் செயலாளர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில், ஊரகக்கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் கலந்து கொண்டு நடைமுறை விடயங்கள், செயற்திட்ட தீர்மானங்கள் தொடர்பான கருத்தமர்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

### தடுப்பு மருந்து ஏற்றல்

ஜப்பானிய மூளைக்காய்ச்சலுக்கு எதிரான தடுப்பூசி மருந்து 2000 ஆண்டு கார்த்திகை மாதத்திற்குப் பின்னர் பிறந்த குழந்தைகளுக்கு 2002 கார்த்திகை மாததத்திற்கு முன்பு பிறந்த பிள்ளைகளுக்கு (1-3 வயது) வழங்கப்படவுள்ளது.

இது இணுவில் தாவடிக் கிராமங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு, எதிர்வரும் திங்கட்கிழமை இணுவில் மத்திய மருந்தகத்தில் காலை 8 மணியிலிருந்து வழங்கப்படும்.

### பரிசளிப்பு விழா

யாழ்.அராலி இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் வி.மோகனநாதன் தலைமையில், கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாவின் முதன்மை விருந்தினராக சங்கானை கல்விக்கோட்ட கல்விப் பணிப்பாளர் சி.செல்லையாவும், சிறப்பு விருந்தினராக சங்கானைக் கிளை மக்கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர். (118)

### ஸ்ரெச்சர்கள் இல்லாமையால் நோயாளர்கள் பெரும் சிரமம்

யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ சத்திரசிகிச்சை விடுதிகளில் நோயாளர்களின் பாவனைக்கென ஸ்ரெச்சர்கள் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால், 1 ஆம் மாடியில் இயங்கும் சத்திரசிகிச்சை அறைக்கு கொண்டுசெல்லப்படும் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். நோயாளர்களை கைகளிலேயே தூக்கிச்செல்லவேண்டியநிலை காணப்படுகின்றது. (111)


**ராஜா** யாழ்ப்பாணம்.
**பிதாமகன்**
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1751)


### சாவகச்சேரி நகரசபையில் கலந்துரையாடல்

சாவகச்சேரி நகரசபையினரால் அடுத்த வருடம் செயற்படுத்தப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் செயலாளர் மு.செ.சரவணபவன் தலைமையில், நாளை காலை 10 மணிக்கு நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள், தென்மராட்சி நலன்காக்கும் சேவைகள் சங்க உறுப்பினர்கள், வர்த்தக கைத்தொழில் மன்ற உறுப்பினர்கள் மற்றும் சமூகப் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (29)

### இலவச மருத்துவ முகாம்

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்றுறை லயன்ஸ் கழகத்தினரால், இலவச மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் நாளை 9 மணி தொடக்கம் 1.30 மணிவரை இலவச மருத்துவ முகாம் நடைபெறும். இதில், கண் பரிசோதனை, மூக்குக்கண்ணாடி வழங்கல், பொது வைத்தியப் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, சரும வியாதிப் பரிசோதனை போன்ற நோய்களுக் குச் சிகிச்சை அளிக்கப்படவுள்ளது.

### வீடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் வாரம் தோறும் காண்பிக்கப்பட்டுவரும் திரைப்படக் காட்சித்தொடரில், நாளை முற்பகல் 10 மணிக்கு City of Joy (மகிழ்வான நகரம்) என்னும் திரைப்படம் தமிழ் உப தலைப்புக்களுடன் காண்பிக்கப்படவுள்ளது.

இத்திரைப்படக் காட்சிக்கு ஆர்வலர்கள் அனைவரும் வருகைதந்து பயன்பெற முடியுமென புறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

### உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏயின் வருடாந்த உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகள் முன்னர் அறிவிக்கப்பட்டமைக்கு ஏற்ப கரம், பூப்பந்தாட்டம், சதுரங்கம், மேசைப் பந்தாட்டம் என்பனவற்றுக்கான போட்டிகள் இடம்பெறவுள்ளன.

வீரர்களுக்கான போட்டி ஒழுங்குத் தெரிவு இன்று இடம்பெற்று, போட்டிகள் யாவும் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும். இம்முறை முதன்முறையாக ஒவ்வொரு போட்டியிலும்5 தனி நபர் ஆட்டத்தில் முதல்நிலை வீரருக்கு அவ்விளையாட்டுச் சார்ந்த பெறுமதியான பரிசில்கள் வழங்கவுளளமை (விளையாட்டு உபகரணங்கள்) குறிப்பிடத்தக்கது. (205)


## பணிநிலை வேண்டுகை

யாழ். மாவட்ட வருவாய்ப்பகுதி ஆளுகையில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. வேண்டுகையரின் தன்வரலாறு அடங்கிய (சுயவிபரம்) விளக்கங்களை 2003.11.09 ஆம் நாளுக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

### பணிநிலைகள்

01. வரி அறவீட்டாளர்
02. எழுதுநர்

### தகமைகள்

**பணிநிலை - 01**
01. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை: 18 - 40 வரை

**பணிநிலை - 02**
01. க.பொ.த உயர்தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை: 18 - 40 வரை

**வேண்டுகைகள் அனுப்பவேண்டிய முகவரி:**
அலுவலர்,
மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,
வருவாய்ப்பகுதிச் செயலகம்,
கிளிநொச்சி.

**நேர்முகத்தேர்வு நடைபெறும்**
நாள் : 2003.11.12
நேரம் : காலை 9.00 மணி
இடம் : வருவாய்ப்பகுதிச் செயலகம்
யாழ்சாலை, பளை.

குறிப்பு: 01. நேர்முகத்தேர்வுக்கு கடிதம் அனுப்பப்படமாட்டாது.
02. நேர்முகத்தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகைதருதல் வேண்டும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,
வருவாய்ப்பகுதி.

(520)

# இலங்கையிலுள்ள அனைத்து மக்களும் சிஹல உறுமயவை கண்டிக்கவேண்டும்

## காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

நீண்டகாலப்போரின் பின்னர், முதன்முறையாக நாட்டின் இரு இனத்தின் முன்னணிக் கலைஞர்களும் இணைந்து நடாத்திய கலைக கூடலில், தாக்குதலை நடாத்திய சிஹல உறுமய கட்சியின் நடத்தையை, இலங்கை நாட்டின் அனைத்து மக்களும் கடுமையாகக் கண்டிக்கவேண்டும் என்று நிலவள அமைச்சர் கலாநிதி ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்களின் முன்னணிக் கலைஞர்களான - சக்கரித காம்லத், தர்மசிறி பண்டாரநாயக்க போன்ற பிரபலங்கள் உட்பட ஏராளமான கலைஞர்களும் பங்கேற்ற இந்த நிகழ்வில், இரு இனங்களின் உறவை மீண்டும் கட்டி எழுப்ப இருபகுதியிலும் இருந்து ஏராளமான பிரமுகர்கள் பங்கேற்க வந்திருந்த வேளையில், இத்தகைய தாக்குதலை நடாத்தியது மிகவும் கண்டிக்கத்தக்கது என்று அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

திவயின பத்திரிகை எப்போதுமே இனத்துவேசத்தை மக்களிடம் தூண்டி வந்ததைச் சுட்டிக்காட்டிய அமைச்சர், கலைக்கூடலில் தாக்குதலை மேற்கொண்டவேளையிலும், 8 திவயின பத்திரிகையைச் சார்ந்தவர்கள் நேரடியாகத் தாக்குதலில் ஈடுபட்டமை அவதானிக்கப்பட்டுள்ளதுடன், தொலைக்காட்சியிலும் அது பதிவாகியுள்ளதாகத் தெரிவித்தார்.

மனித உரிமை மீறலையும் உள்ளடக்கிய இத்தகைய கேவலமான தாக்குதல், 1983 ஆம் ஆண்டுத் தாக்குதலைவிடக் கேவலமானதாகவே கருதவேண்டியுள்ளது என்று குறிப்பிட்ட அவர், இத்தகைய கீழ்த்தனமான தாக்குதலால், சிங்கள இனத்திற்கே சிஹல உறுமய மிகப் பெரிய அவமரியாதையைத் தேடித் தந்துள்ளதாகக் கூறினார்.

இத்தாக்குதலின்போது, பொலிஸார் போதிய நடவடிக்கைகளை வேகமாக எடுக்காததோடு, தாக்க வந்தவர்களைத் தடுக்கவும் தவறியது குறித்து தாம் சந்தேகம் கொள்வதாகவும் அமைச்சர் சேனாரத்ன மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில், இத்தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், சிஹல உறுமய கட்சியைச் சார்ந்த ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்களில் ஒருவர் சிஹல உறுமயவின் உறுப்பினர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும், பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதி லியனகே - பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

### வினாவிடைப்போட்டி

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்களால் நடாத்தப்படும்- மறைந்த ஜெயக்குமார், கிருபாகர் ஞாபகார்த்தமாக வருடாந்தம் நடாத்தப்படும் வாய்மொழிமூல விஞ்ஞான வினா-விடைப் போட்டியின் இறுதிச் சுற்றுப்போட்டிகள் - நாளை நடைபெறவுள்ளன. இந்தப்போட்டிக்கு ஹாட்லிக்கல்லூரி, யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ். இந்துமகளிர் கல்லூரி ஆகியன தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இவற்றுக்கான இறுதிச்சுற்றும், பரிசளிப்பு நிகழ்வும் நாளை காலை 9 மணிக்கு விவசாயபீட பிரதான விரிவுரை மண்டத்தில் நடைபெறவுள்ளன.

# வானொலி ஒலிபரப்பு உலக சாதனையை முறியடித்துள்ள சிவாந்தி சிவசுப்பிரமணியம்

ஐரோப்பிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வானொலியூடாக, செல்வி சிவாந்தி சிவசுப்பிரமணியம் நடாத்திய உலக சாதனைப் பயணம்- கடந்த 28 ஆம் திகதியன்று ஐந்தாவது நாள் பொழுதில் சுவீடன் நாட்டவரால் நிகழ்த்தப்பட்ட உலக சாதனையான 103.5 மணித்தியாலங்களை முறியடித்து, புதிய 111.45 மணித்தியாலங்களை எட்டினார்.



தனது சாதனைப் பயணத்தில் தொடர்ந்து முன்னேறிச் சென்ற சிவாந்தி, நேற்றுமுன்தினம் ஐக்கிய இராச்சிய நேரம் அதிகாலை 1.45இற்கு தனது உடல் நிலையில் ஏற்பட்ட சோர்வு காரணமாக, தீர்மானித்திருந்த 123 மணித்தியாலங்களை எட்டும் முன்னர், தனது புதிய சாதனைப் பயணத்தை 111.45 மணித்துளிகளை முடித்துக்கொண்ட வெற்றியோடு நிறைவுசெய்தார்.

புதிய கின்னஸ் உலக சாதனையாக 111 மணித்தியாலங்கள், 45 நிமிடங்களை நிறைவுசெய்து, இன்று ஒலிபரப்புத்துறையில் உலகின் முதலாவது பெண் அறிவிப்பாளர் என்ற பெருமையைப் பெற்று, உலக தமிழருக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்.

உலக சாதனை படைத்த சிவாந்தி சிவசுப்பிரமணியத்துக்கு உலகமெங்கும் வாழும் அனைத்து தமிழ் உறவுகளும் - தொலைபேசியூடாகவும், தொலைநகலூடாகவும், மின்னஞ்சலூடாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்தவண்ணமுள்ளனர்.

உலக சாதனையாளர் சிவாந்தி சிவசுப்பிரமணியம் - தனது அடுத்த உலகசாதனை முயற்சியாகப் பரதநாட்டியத்தில் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு ஆடுவதாகத் தீர்மானித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுமார் ஒன்றரை இலட்சம் கண்ணிவெடிகள் அழிப்பு

(மட்டக்களப்பு)

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் 1 லட்சத்து 66 ஆயிரத்து 609 வெடிபொருட்களை அகற்றி அழித்துள்ளனர்.

1999 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டுவரை, மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் 40 கோடி 5 லட்சத்து 80 ஆயிரத்து 264 சதுர மீற்றர் பரப்பளவில், 82 ஆயிரம் மிதிவெடிகளையும், 86 கண்ணிவெடிகளையும், 62 ஆயிரத்து 542 எறிகணைகளையும், கைக் குண்டுகளையும், 2003 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் மாதமவரை - 6 லட்சத்து 26 ஆயிரத்து 873 சதுர மீற்றர் பரப்பளவில் - 4733 மிதிவெடிகளையும், 6 டாங்கி எதிர்ப்பு கண்ணிவெடிகளையும், 12 ஆயிரத்து 695 வெடிபொருட்களையும் - மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் அகற்றியுள்ளனர்.

தற்போது என்பி.எ, மக், எவ்எஸ்.டி, டி.டி.ஜி. ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன், மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் பணியை மேற் கொண்டு வருகின்றது.

### இரட்டைப்படுகொலை; மூன்று சந்தேக நபர் கைது

(கொழும்பு)

9 வருடகாலத்திற்கு முன்னர் மொறகடசேன என்ற இடத்தில் நடைபெற்ற இரட்டைப்படுகொலை தொடர்பாக - மூன்று சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். தமக்குக் கிடைத்த தகவலையடுத்து, ஒரு சில ஆயுதங்களுடன் பொலிஸார் இவர்களைக் கைது செய்ததாக அறிவிக்கப்படுகிறது. மொறகடசேன நீதிவான் - இவர்களை எதிர் வரும் 6 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# நிதி நிர்வாக நடவடிக்கையிலிருந்து அமைச்சுக்களின் செயலர் விடுவிப்பு

நாளாந்த நிதி நிர்வாக நடவடிக்கையிலிருந்து அமைச்சுகளின் செயலாளர்களை விடுவிப்பது என அரசாங்கம் முடிவு செய்திருக்கின்றது.

இது தொடர்பான, அமைச்சரவைப் பத்திரத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாக்கல் செய்துள்ளார். செயலாளர்களின் வேலைப் பழுவைக் குறைக்கும் நோக்கில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகப் பிரதமர் ரணில் விக்கிமரசிங்க கூறியதாக, அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

நிர்வாக மறுசீரமைப்புத் தொடர்பாக, விசேடகுழுவின் பரிந்துரைகளுக்கு அமைய, நிதி நிர்வாக பணிகளைப் பிரதிச் செயலாளர்களிடம் ஒப்படைப்பது என முடிவு செய்யப்பட்டது. இந்தத் தீர்மானத்தை முதலில் பிரதமர் அலுவலகம், பாதுகாப்பு உள்துறை அலுவலகம், போககுவரத்து, நெடுஞ்சாலை, விவசாய, கல்வி, நிதி அமைச்சின் காரியாலங்கள் என்பவற்றில் அமுல் செய்வதென அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு, இவ்வருடமும் மேலதிக கொடுப்பனவுத் தொகை வழங்குவது என அமைச்சரவை முடிவு செய்திருக்கின்றது.

இதற்கு அமைய 10 ஆயிரம் ரூபா அல்லது இரண்டு மாதத்தின் கொடுப்பனவிற்குக் குறைந்த தொகை, மேலதிக கொடுப்பனவாக வழங்கப்படும். கடந்த வருடத்தில் கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட, நஷ்டத்தில் இயங்கிவரும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கும், ஆயிரம் ரூபா தொகையை மேலதிக கொடுப்பனவாக வழங்க அமைச்சரவை முடிவு செய்திருக்கின்றது. நிதி அமைச்சர் கே.என். சொக்ஸி இது தொடர்பான யோசனையை முன்மொழிந்தார். (01)

### மிதிவெடியில் சிக்கிய சிறுவன் மரணம்

(கொழும்பு)

வெல்லாவெளியில் மிதிவெடியில் சிக்கி, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கே. டிலோஜன் என்ற ஏழு வயதுச் சிறுவனே மிதிவெடியில் சிக்கி, நேற்றுமுன்தினமிரவு மரணமானவர் ஆவர்.

மதிவெடியில் சிக்கிய இந்தச் சிறுவனின் கண்களும், மூளையும் பாதிக்கப்பட்டமையே மரணத்திற்கான காரணம் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் எம். தேவராஜன் தெரிவித்தார்.

# அரசின் வரவு செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு முக்கியத்துவம்

(கொழும்பு)

அரச வரவு - செலவுத் திட்டத்தில் சம்பளம் உட்பட, நான்கு துறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அபிவிருத்தி முயற்சியினை மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அடுத்த ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தில், அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு குறைப்பு, தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கம், உடகட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது சம்பந்தமான விடயங்களே, வரவு - செலவுத் திட்டத்தில் முக்கியத்துவம் பெறுகிறது.

அடுத்த ஆண்டிற்குரிய வரவு - செலவுத் திட்டம் 12 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

# வவுனியா நலன்புரிநிலையத்தில் தரமற்ற நிவாரணப்பொருட்கள்

வவுனியா - சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் 935 குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரத்து 627 பேர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் 1843 பெண்களும், 1784 ஆண்களும் அதில் உள்ளடங்குகின்றனர்.

நீண்ட காலமாக அந்த மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணப் பொருட்களின் நிறை குறைந்தும், பாவனைக்கு உதவாததவையுமாக இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அரச உயர் அதிகாரிகள் கண்காணிப்பில் ஈடுபடும்போது, உரிய முறையில் நிவாரணப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. அவர்கள் இல்லாத நேரத்தில் தரமற்ற பொருட்களே வழங்கப்படுகின்றன.



**அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அரசியற்துறைப் பொறுப்பாளர் சீ.இளம்பரிதியை சந்தித்து கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.**

# மாணவிகளை வல்லுறவுக்குட்படுத்திய ஆசிரியருக்கு மேலும் சிலர் உதவி

## விசாரணைகள் துரிதம்

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தில் இரண்டு மாணவியரை பலாத்காரம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், விளக்க மறியலிலுள்ள ஆசிரியருக்கு மேலும் சிலர் உதவிபுரிந்திருக்கலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்ட மாணவியை உடற்பரிசோதனை செய்தபோது, அந்த மாணவி கருத்தடை மாத்திரைகளை உட்கொண்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தின் பின்னணியில் ஆசிரியரிடம் விசாரணை நடத்தியதில் - குறித்த ஆசிரியர் அந்தப் பெண்ணுக்குக் கருத்தடை மாத்திரைகளை வழங்கவில்லை என்று கூறினார். அதேபோல், மாணவியும் தானாகக் கருத்தடை மாத்திரையை உட்கொள்ளவில்லை என்றும் விசாரணைகளிலிருந்து அறியமுடிகிறது.

இந்த நிலையில், ஆசிரியருக்கு வேறு சிலரும் உதவியிருக்கலாம் என்ற அடிப்படையில், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சப்பிரகமுவ கல்வி அமைச்சும் இந்த விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# இராணுவத்தினருக்கு பெற்றோல் வழங்க கூட்டுத்தாபனம் இணக்கம்

இராணுவ வாகனங்களுக்கான எரிபொருளைக் கிரமமாக விநியோகிப்பதற்கு, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணங்கியுள்ளது. எரிபொருள் கொள்வனவு தொகையில் சுமார் 300 மில்லியன் ரூபாவை இராணுவம் தமக்குச் செலுத்த வேண்டியிருப்பதால், இது செலுத்தி முடியும்வரை இராணுவ வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பப்படமாட்டாது எனப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் முன்னர் அறிவித்திருந்தது. எனினும், அமைச்சர் கரு ஜெயசூரியவின் வேண்டுகோளின் அடிப்படையில், இராணுவத்தினரின் வாகனங்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்குப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணங்கியுள்ளது. (01)

# குடாநாட்டின் நிலைமை தொடர்பாக கண்காணிப்புக்குழு - ரெலோ சந்திப்பு

அண்மையில் வவுனியாவிலும், மட்டக்களப்பிலும் - கொல்லப்பட்ட தமது இரண்டு உறுப்பினர்களும், இராணுவப் புலனாய்வுப் பிரிவினராலேயே சுட்டுக் கொலைசெய்யப்பட்டிருப்பதாகத்தாம் சந்தேகமடைவதாக, ரெலோ அமைப்பினர் கண்காணிப்புக் குழுவிற்குத் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள ரெலோ அலுவலகத்தில் - காலை 11.30 மணிதொடக்கம் 12.30 மணி வரை கண்காணிப்புக் குழுவினருக்கும், ரெலோ உறுப்பினர்களுக்கும் இடையே, சந்திப்பொன்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் ரெலோ அமைப்பின் சார்பில் - நாடாளு மன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், அந்த அமைப்பின் பிரசாரச் செயலாளர் விந்தன் கனகரத்தினம், யாழ். மாவட்ட செயலாளர் கௌரி பாலன் திலீப், பொதுக்குழு உறுப்பினர் ஏ.தவநாதன் ஆகியோரும், கண்காணிப்புக்குழு சார்பில் டக்பின்னும் கலந்துகொண்டனர்.

தற்போது, படையினர் மக்களுடன் முரண்பட்டு வருகின்றார்கள். படையினரின் வாகனங்கள், பொது மக்களை மோதுவதனால் பொது மக்களுக்கும், படையினருக்கும் இடையே மோதல் சம்பவங்கள் ஏற்படுகின்றன. இவற்றைச் செய்தி சேகரிக்கச் செல்லும் ஊடகவியலாளர்களும், படையினரால் தாக்கப்படுகின்றனர் எனவும், ரெலோவின் சார்பில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில், மக்களின் வாழ்விடங்களிலுள்ள படைமுகாம்கள் உடனடியாக அகற்றப்படவேண்டும். இது புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்தனர். (03)

## சட்டவிரோதமாக மரம் வெட்டினால் கடும் நடவடிக்கை

வடமராட்சி கிழக்கு மணற்காடு-குடத்தனைப் பகுதிகளிலுள்ள, சவுக்கங்காட்டில் - சட்ட விரோதமாக மரம் வெட்டுபவர்களுக்கெதிராக, நாளைமுதல் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென, பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது, இந்த சவுக்கங்காட்டுப் பகுதியில் பெருமளவான மரங்கள் விறகுத்தேவைக்காகச் சட்ட விரோதமான முறையில், அந்தவூர் மக்களாலும், வெளியிடங்களைச் சேர்ந்தவர்களாலும் தறிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (13)

# மோட்டார் போக்குவரத்து திணைக்கள நடமாடும் சேவைகள் நேற்று ஆரம்பம்

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால், ஒழுங்கு செய்யப்பட்ட மூன்று நாள் நடமாடும் சேவை நேற்று ஆரம்பமாகியது. நேற்றைய முதல் நாள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள், தமது வாகனங்களின் பதிவுகளை மேற்கொள்வதற்காக வந்திருந்தனர். அதிகளவான மக்கள் வந்திருந்தமையினால் பதிவுகளை மேற்கொள்வதிலே அதிகாரிகள் இடர்களை எதிர்நோக்கினர்.

விண்ணப்பப்படிவங்களைப் பெறுவதற்கும், அவற்றை ஒப்படைப்பதற்கும், பணம் செலுத்துவதற்கும் மக்கள் முண்டியடித்துக் கொண்டு நிற்பதை காணக்கூடியதாக இருந்தது. மக்களைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறிய அதிகாரிகள், பொலிஸாரின் உதவியை கோருவது தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

யாழ்.மாவட்டதைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பிறமாவட்டங்களில் இருந்தும் பெருமளவான பொதுமக்கள் வந்திருந்தனர். கொழும்பில் இருந்து வருகை தந்த அதிகாரிகளும், யாழ்.செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவை சேர்ந்த அதிகாரிகளும் பதிவுகளை மேற்கொள்வதில் ஈடுபட்டனர்.

சரியான திட்டமிடலின்றி மேற்கொள்ளப்பட்டமையினாலேயே, மக்களும், அதிகாரிகளும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டது என மக்கள் விசனம் தெரிவித்தனர். (ச)

# அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு இன்றும், நாளையும் - செயலமர்வுகள்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால், நடாத்தப்படும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வும், கருத்தரங்கும் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளன.

இராமநாதன் கல்லூரி, பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வு - காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை நடைபெறவுள்ளது. இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தலைமையில், நடைபெறவுள்ள ஆரம்ப நிகழ்வில், இராமநாதன் கல்லூரி ஆலயத்தில் விஷேட பூசையும், கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த நிகழ்வில் ஆசியுரையை சிவ.சண்முகவடிவேலும், வாழ்த்துரையை இந்துசமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரனும் நிகழ்த்தவுள்ளனர். விரிவுரைகளை 'பக்தி இலக்கியங்கள்' என்ற தலைப்பில் சிவ.மகாலிங்கமும் "சிவாலய வழிபாட்டு முறைகள்" என்ற தலைப்பில் இளைப்பாறிய அதிபர் வ.சிவகணேசனும், "சைவ சித்தாந்தம்" என்ற தலைப்பில் சு.செல்லத்துரையும் நிகழ்த்தவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்விற்கு, தெல்லிப்பளை கலாசார உத்தியோகத்தர் மா.அருள்சந்திரன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் தொடக்கவுரையை - எஸ். வைத்தியலிங்கமும், வாழ்த்துரையை - இராமநாதன் கல்லூரி அதிபர் ஆனந்தி சிவஞானசுந்தரமும் நிகழ்த்தவுள்ளனர்.

மாலைகட்டுதல், கோலம் போடுதல் போட்டிகளும், அவற்றுக்கான சான்றிதழ் வழங்கலும் நடைபெறவுள்ளன.

# புலிகளால் மாணவிகள் விடுவிக்கப்பட்டமை முக்கியத்துவம் பெறுவதாக உள்ளது

## யுனிசெப் பிரதிநிதி சேரா

கடந்த சனிக்கிழமை அரசு, புலிகள், யுனிசெப் என்பன இணைந்து போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் மறுவாழ்வு சம்பந்தமாக, கிளிநொச்சியில் ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதன்பின் இன்று இடம் பெறும இந்தச் சிறுவர் கையளிப்பு நிகழ்வு முக்கியத்துவம் பெறுகிறது எனத் தெரிவித்தார் யுனிசெவ் பிரதிநிதி சேரா.

புலிகள் இயக்கத்துடன் இணைய வந்த 18 வயதிற்கு கீழ்ப்பட்ட மாணவிகள் இருவரை - அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கும் நிகழ்வு யாழ். நல்லூர்க் கோட்ட அரசியற்துறை பணிமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது, அதில் கலந்து கொண்டு உரையாற்றினார் சேரா. அவர் தொடர்ந்து கூறுகையில் -

சிறுவர்களை படையில் சேர்ப்பதில்லை என்ற புலிகளின் நிலைப்பாட்டை நாம் வரவேற்கின்றோம். இந்த விடயத்தில் புலிகள் பூரண ஒத்துழைப்பு வழங்குகிறார்கள்.

போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் புனர்வாழ்வு செயற்திட்டம் பிரத்தியேகமான பிரிவாக உள்ளது. இவர்கள் மீளவும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், அவர்களின் புனர்வாழ்விற்கு - யுனிசெவ், சிறுவர் பாதுகாப்பு நிதியம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பன பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளதாகத் தெரிவித்தார். (111)

## வயோதிபர்களுக்கு உடுபுடவை

(அச்சுவேலி)

தீபாவளி பண்டிகையையொட்டி - இந்துசமய விவகார அமைச்சினால், சந்நிதியான் ஆலயத்திலிருக்கும் வயோதிபர் மற்றும் நோயாளர்களுக்கு சுமார் 24 ஆயிரம் ரூபா பெறுமதியான உடுபுடவைகள் வழங்கப்பட்டன. (79)

# வெளிச்சம் சஞ்சிகையின் 83 ஆவது இதழ் வெளியீடு

விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சமூக சஞ்சிகையின் 83 ஆவது இதழ் வெளிவந்திருக்கின்றது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன் மாலிகா, புதுவை இரத்தினதுரை, யுகனேசன், கோகுலராகவன், துன்னாலை செல்வம், சோ.சி.கலைக்கதிர், நெடுந்தீவு மகேஷ், துவாரகன், ஆத்மசூரி, சிதம்பரநாதன், இரமேஷ், இயல்வாணன், யாத்தீரிகன் ஆகியோரின் கவிதைகளும், ந.மயூரரூபன், சி. கதிர்காமநாதன், தாட்சாயணி, சாந்தினி வரதராஜன், சு.மகேந்திரன், ஆதித்தநிலா, சி. மாதுளா ஆகியோரின் சிறுகதைகளும் இடம்பெற்றிருக்கின்றன.

இவற்றுடன் முல்லை யேசுதாசன். மலைமகள், தே. தேவானந்த், ஞாபகன் ஆகியோரின் கட்டுரைகளும், சோ. பத்மநாதனின் மொழிபெயர்ப்புக் கவிதை மற்றும் தூது, அஞ்சலி என்பனவும் இடம்பெற்றுள்ளன. நவம்பர் மாதத்தில் இருந்து வெளிச்சம் இணையத்தளத்தில் இருந்து பார்வையிடக்கூடியதாகத் தனியான இணையத்தளமொன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதன் முகவரி விரைவில் அறிவிக்கப்படுமென விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகச் செய்திக் குறிப்பு தகவல் வெளியிட்டிருக்கின்றது.



நேற்று ஆரம்பமான மோட்டார் போக்குவரத்து திணைக்கள நடமாடும் சேவையில், தமது வாகனங்களுக்கான பதிவுகளை மேற்கொள்ள முண்டியடிக்கும் மக்களை படத்தில் காணலாம்.

## மதுபானக் கடையால் மக்கள் பாதிப்பு

(அரியாலை)

அரியாலை கனகரட்ணம் வீதியை அண்டியுள்ள ஒரு வீதியில், மதுபானம் விற்கப்படுவதால், அங்கு வருபவர்கள் அந்தப் பகுதி மக்களுடன் தகாதமுறையில் சண்டைகள், வாய்த்தர்க்கம், என்பவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களையும் பாவிப்பதால், அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

நள்ளிரவுவரை அந்த மதுபானக் கடையில் மதுபானம் விற்கப்படுவதால், அதனைக் குடிக்க வருபவர்களில் ஒரு சிலர் - அந்தப் பகுதியில் திருட்டு நடவடிக்கையிலும் ஈடுபடுகின்றார்கள் என்றும் தெரிய வருகிறது. (55)

வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : சி.லஜன்சன்
முகவரி : வளலாய்,
அச்சுவேலி.

நான்காவது அகவையில்

பெயர் : உ.டயானிகா
முகவரி : வளலாய்,
அச்சுவேலி.



ஐந்தாவது அகவையில்



பெயர் : கே.பிரவீணா
முகவரி : 414/5, கோவில் வீதி,
நல்லூர்.

ஒன்பதாவது அகவையில்

பெயர் : செ.அனுசிகா
முகவரி : இன்பர்சிட்டி,
பருத்தித்துறை



பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# சந்தேகம் → விளக்கம்



**குளத்தில் கல்லை எறிந்தால் எழும் அலைகள் வட்டவட்டமாக இருப்பதேன்?**

தண்ணீரில் கல் விழும் போது, அந்த இடத்தின் மேற்பரப்பில் - அதிர்வு ஏற்படுகிறது. இந்த அதிர்வு மற்ற இடங்களுக்கும் பரவுகிறது. அதனால் தான் அலை வளையங்கள் உணடாகின்றன. தண்ணீரின் மேற்பரப் பில் இந்த அலையின் வேகம் எல்லாத்திசைகளிலும் சம அளவில் இருக்கும். இதனால், கல் விழுந்த இடத்திலிருந்து சமவேகத்தில் எல்லாத் திசைகளிலும் பரவுகின்ற இந்த அலையானது, எந்த நேரத்திலும் சமதூரத்தில் இருக்கிறது. ஒரு புள்ளியி லிருந்து சமதூரத்தில் இருக்கும்படி ஒரு பரப்பின் மீது கோடு வரைந்தால், அது வட்டமாகத்தானே இருக்கும். அதேபோல்தான், தண்ணீரில் கல்லை எறிந்தால் எழும் அலைகள் வட்டவடிவமாக இருக்கின்றன.

# முயல் ஆமையால்

**ஆ**மையின் வேகமும், முயலின் வேகமும் உங்களுக்குத் தெரியும் தானே! அப்பாவி ஆமையை ஓட்டப்போட்டிக்கு அழைத்தது முயல். தனது திறமையை நன்கு அறிந்திருந்த முயல்- ஆமையை ஓட்டப் போட்டிக்கு அழைக்க, ஆமைக்கு இது ஒரு கௌரவப் பிரச்சினையானது. எதிலும் அடக்க மாக இருக்கும் ஆமையை, இலாவகமாகத் துள்ளித்திரியும் முயல் ஓட்டப்போட்டிக்கு அழைத்திருக்கக்கூடாது. எனினும், ஆமை முடியாது எனக



# தோற்ற கதை

கூறவிரும்பவில்லை.

'ஆயத்தம்', 'ஆரம்பம்' - விளையாட்டுத் தொடங்கி விட்டது. எல்லை கண்ணுக்கு எட்டும் தூரத்திலுள்ள ஒரு மரத்தடிவாரம். துள்ளிக்குதித்தோடிய முயல் - அரைவாசித் தூரம் ஓடிவிட்டுத் திரும்பிப் பார்த்தது. ஆமை மெதுவாக வருவதைப் பார்த்த முயல், மரதகின் கீழ் படுத்துவிட்டது. தென்றல் காற்று வீசியதால், முயல் தன்னை மறந்து தூங்கிவிட்டது. நேரம் ஓடிக்கொண்டி ருந்தது. ஆமை - முயல் தூங்கும் மரத்தைத் தாண்டி வெற்றிக் கம்பத்தைத் தொட்டுவிட்டது. சட்டென விழித்த முயல், தட்டுத்தடுமாறி ஓடிச்சென்று எல்லையை அடைந் தது. அங்கே ஆமை ஆரவாரமில்லாமல் அமைதியாக நின்றுகொண்டிருந்தது. இதுதான் முயல் - ஆமையால் தோற்ற கதை. அடக்கமுடையவர்களை - அறிவில்லா வர்கள் என்று கருதி, போட்டிபோடுவது அறியாமையாகும்.

சி.விதுஷா
தரம் - 9, யாழ்.உ.ம.கல்லூரி.

# கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்

## விடுகதை கூட்டல்கள்

எந்தப் பக்கத்தால் கூட்டினாலும் கூட்டுத் தொகை 21 ஆக வரவேண்டும். நீங்கள் பயன் படுத்தவேண்டிய இலக்கங்கள் - 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11 ஆகியனவாகும்.

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

விடை அடுத்த வாரம்

ம.நிரோஷனா
இந்து மகளிர் கல்லூரி.

# புதிர்கள்

1. 'கடல்' நடுவில் இருப்பது என்ன?
2. யானையும், எலியும் பஸ் ஏறுவதற்காக ஓடி வந்தன. யானை பஸ் ஏறிவிட்டது. எலி பயந்து திரும்பி ஓடியது. அது ஏன் ஓடியது?

சி.மதுசுதன்
தரம் - 2, மானிப்பாய் விக்தியாலயம்

விடை அடுத்த வாரம்

**சென்ற வார விடைகள்**

1. முதலில் கோழியை மறுகரைக்குக் கொண்டு செல்லுங்கள். பின்னர், திரும்பி வந்து நாயைக் கொண்டு சென்று, மறுகரையில் விட்டு விட்டு, கோழியை மீண்டும் இந்தக் கரைக்குக் கொண்டு வாருங்கள். கோழியை இந்தக் கரையில் விட்டுவிட்டு, அரிசியை மறுகரைக்குக் கொண்டு செல்லுங்கள். அதன்பின் திரும்பி வந்து, கோழியை எடுத்துச் செல்லுங்கள். இப்போது சிவசாமி முன்றையும் கிராமத்திற்குக் கொண்டு செல்லலாம்.

2.







# தந்திரத்தால் பூனையைக் கொன்ற எலிகள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

உ மாவிற்குப் பயந்த எலிகள் அந்தக் வீட்டில் குடி பேரின. அந்த வீடு எரிகளைத் தாக்குதலுக்கு உட்பட்டதால், கரை சிதைவடைந்திருந்தது. அத்துடன், அங்கு எவரும் குடியிருக்கவில்லை. அதனால், எலிகளுக்குப் போதியளவு உணவு கிடைப்பதில்லை.

எலிகள் எல்லாம் அன்று ஒன்றாகக்கூடி, என்ன செய்யலாமென ஆலோசனை செய்தன. "முன்பெல்லாம் கருத்திரமாக பரமேஸ்வரனின் வீட்டில் உணவி வந்தோம். இப்பொழுது கீழே இறங்கவே பயமாக உள்ளது. இரண்டு நாட்களாக நானும், எனது ஏழு பிள்ளைகளும் பட்டினி கிடக்கிறோம்" என்றது தாய் எலி.



ஒரு முடிவு கட்டாவிட்டால், நாம் எல்லோரும் பட்டினி கிடந்து சாகவேண்டியதுதான்" என்றது தாத்தா எலி.

"நினைத்தால் கவலையாக இருக்கிறது. நாம் எல் லாம் எவ்வளவு சந்தோஷமாக இருந்தோம். எமது இனத் திற்கே யமனாக வந்திருக்கும் பூனையை - எப்படி பட்டாவது ஒழிக்கவேண்டும்" என்றது தாய் எலி.

"எப்படி ஒழிப்பது, எல்லோரும் கவலமாக ஒழிக்கலாம் என்று சொல்லும். ஆனால், ஒழிப்பது எப்படி? பூனையோ பெரிய மிருகம். எம்மினத்தைக் காலம் காலமாகக் கொன்று தின்றுகொண்டு வருகிறது. இந்தத் துன்பத்தில் இருந்து நீங்க யாராவது எமக்கு உதவமாட்டார்களா" என்றது தாத்தா எலி.

யாராவது நம்பி பிரயோசனம் இல்லை. எமது எதிரியை நாம்தான் கொல்லவேண்டும். எமக்கு உத விக்கு வருபவர்கள் எம்மை அழைமயாக்கிக்கொள்ளவே முயல்வர். அத்துடன், அதைத்தப் பயந்துதான் நாம் வாழவேண்டியதில்லை உண்மைதான். அதனால், நாமே பூனை யைக் கொல்லவேண்டிய திட்டத்தைத் தயாரிப்போம் என்றது இளைதுனான மகள் எலி.

வாலிபத் துடுக்கால் கண்டபடி நீ பேசுகிறாய். பரம் பரை பரம்பரையாக எமது இனத்தைக் கொன்று, தின்று வரும் பூனையைக் கொல்லமுடியாது. பூனையுடன் சண்டை செய்யக்கூடிய தைரியமும் எமது இனத்தாக்கு இல்லை. அதனால், எமது பிள்ளை குட்டிகளை யும், இனத்தவர்களையும் அழைத்துக்கொண்டு வேறு வீட்டுக்குச் செல்லோம் என்றது தாய் எலி.

தாத்தா எலி சிரித்தது. முன்பும் இப்படித்தான். இரா மநாதனின் வீட்டில் இருந்தோம். அவர்கள் பூனையை வளர்த்தால் எமது இனத்தவர் பலர் கொல்லப்பட்டனர். அதனால், அங்கிருந்து அகதிகளாகப் புறப்பட்டு, பரமேஸ் வனின் வீட்டுக்கு வந்தோம். கொஞ்ச நாட்கள் மகிழ்ச்சியாக க் கழிந்தன. பரமேஸ்வரனின் வீட்டிலும் வாழமுடிய யாதுகள், இங்கே வந்து பட்டினி கிடக்கிறோம். இனி அம்மா சொல்லைதப்போல் எங்கேயாவது போனைத் தவிர, வேறுவழி தெரியவில்லை என்று கவலையாகச் சொன்னது தாத்தா எலி.

(தொடரும் ....)

கேவிதுணகேசன்

# சிறுவர் அரங்கம்



# நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

## அயர்லாந்து

வாரம் தோறும் அறிந்து கொள்ளும் நாடுகளின் வரிசையில் இந்த வாரம் இடம்பெறுவது அயர்லாந்து தீவு.

| | |
|---|---|
| தலைநகரம் | - டப்ளின். |
| பரப்பளவு | - 70,000 ச.கி.மீ. |
| மொழி | - ஐரிஸ், ஆங்கிலம். |
| சமயம் | - கிறிஸ்தவம். |
| நாணயம் | - ஐரிஸ் பவுண். |
| சராசரி ஆயுள் | - ஆண் - 74. பெண் - 80. |
| முக்கிய நகரங்கள் | - டப்ளின், கார்க். |



அயர்லாந்து ஒரு வடமேற்கு ஐரோப்பிய நாடாகும். மொத்தமாக 32 பகுதிகள் சேர்ந்ததே அயர் லாந்து நாடாகும். ஆங்கில இலக்கியத்தின் பல புகழ்பெற்ற எழுத்தாளர்களின் பிறப்பிடமாக இந்த நாடு விளங்குகின்றது.

அயர்லாந்தின் வரலாறு பல குழப்பங்களுக்கு முகம் கொடுத்த போதிலும், அந்த நாட்டு மக்கள் இசையை ரசிப்பதிலும், கதை கேட்பதிலும், நண்பர்களுடன் இனிமையாகப் பொழுதைக் கழிப்பதிலும் நெருக்கமான தொடர்புகளைப் பேணி வருகின்றார்கள்.

1916 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசிற்கு எதிராகக் கிளர்ச்சிகள் செய்து, சுதந்திரநாடாகத் தம்மைப் பிரகடனப்படுத்தி இருந்தார்கள். இதன்போது, பல தலைவர்கள் கொல்லப்பட்டு, இந்தக் கிளர்ச்சி நசுக்கப்பட்டது. ஆயினும், 1921 ஆம் ஆண்டு அயர்லாந்தின் 26 பகுதிகள் சுதந்திரம் பெற்றபோதிலும், இதில் 6 பகுதிகள் வட அயர்லாந்து என்னும் பெயரில், தற்போதும் பிரித்தானியாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் விவசாயத்தில் தங்கியிருந்த அயர்லாந்து - பின்னர் நவீன தொழில்நுட்பத் திறந் தம்மை மாற்றிக் கொண்டது. இந்த நாட்டின் முக்கிய உற்பத்திகளாக விவசாயம் - கால் நடைகள், உருளைக்கிழங்கு, பார்லி என்பனவும், உற்பத் திப் பொருட்களாக உணவு பதப்படுத் தல் கணினி, மருந்துகள் மற்றும் மது வகைகள் என்பன வும் உற்பத்தி செய் யப்படுகின்றன.



# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
ம.சிவரூபன்
கற்கும் பாடசாலை :-
வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
உதைபந்தாட்டம், சித்திரம் வரைதல்.



முழுப்பெயர் :-
க.கோகிலன்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

முழுப்பெயர் :- மு.தர்சினி
கற்கும் பாடசாலை :-
விக்னேஸ்வராக் கல்லூரி
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், கதைகள் வாசித்தல்.

முழுப்பெயர் :- பே.விசாகேசன்
கற்கும் பாடசாலை :-
இந்து ஆரம்பப் பாடசாலை
கற்கும் தரம :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, சித்திரம்.

முழுப்பெயர்:- மு.அருண்கணேசன்
கற்கும் பாடசாலை :-
யாழ். மத்திய கல்லூரி
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், விளையாட்டு, கல்வித்துறை.

முழுப்பெயர்:- நா.மதுரா
கற்கும் பாடசாலை :-
உடுவில் மகளிர் கல்லூரி
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
இசை, நடனம், தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர்:- அ.மாதுரி
கற்கும் பாடசாலை :-
கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
சங்கீதம், பேச்சு, விளையாட்டு.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
**267,நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
..............................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## தெரிந்து கொள்ளுங்கள்

அண்மையில் இங்கிலாந்திலுள்ள ஒருபெரிய ரேடியோ தொலை நோக்கி நிலையத்திலிருந்து, இசை மற்றும் நிகழ்ச்சிகள் - சந்திர மண்டலத்தை நோக்கிப் பரீட்சார்த்தமாக ஒலிபரப்பப்பட்டன. இந்த ஒலிகள் - அங்கிருந்து திரும்பவும் வந்து, பொஸ்டன் எனும் இடத்தில் மோதின.

சந்திர மண்டலம் ஒலிவாங்கும் ஒரு நிலையமாக உபயோகிக்கப் பட்டமை இதுவே முதல் தடவையாகும். இப்பரீட்சை ஓரளவு வெற்றியளித்துள்ளதென்றும், சந்திரமண்டலத்துக்கு ஒலிபரப்புதல் சாத்தியமென்பதை நிரூபித்துவிட்டதென்றும் விஞ்ஞானிகள் கருது கின்றனர்.

அ.தெய்வீகன்
யாழ். இந்துக் கல்லூரி.

இங்கே மடிக்கவும்



# உங்கள் கைவண்ணம்



உ.விஜித்
தரம் : 7, யாழ். மத்திய கல்லூரி.



சி.நடேஸ்
தரம் : 5,
வல்வை அ.மி.த.க. பாடசாலை.



க.நிசாந்
தரம் -9
சென்.ஜோன்ஸ் கல்லூரி

## MY DOG

I have a pet dog. It's name is Neero. It is fat and strong. It is a black and white dog. It has four short legs and a long bushy tail. It has two bright eyes and two long ears.

M.Jaseepan
Grade - 5

## அன்பு காட்டுவோம்

நண்டின் காலை ஒடிக்காதே
நாயைக் கல்லால் அடிக்காதே
வண்டைப் பிடித்து வருத்தாதே
வாயில்லாப் பிராணியை
வதைக்காதே

கோழிக் குஞ்சைத் திருகாதே
குருவிக் கூட்டைக் கலையாதே
ஆழி சூழும் உலகனைத்தும்
அன்பு காட்டி வருவாயே.

## தெய்வம் நீ அம்மா

அகிலத்தில் உள்ள அத்தனை உயிரும்
அர்த்தம் கற்பிக்கும் குரலோசையில்
பகிரங்கமாய் பறைசாற்றும் முதல்வார்த்தை
பரம்பொருள் தெய்வம் நீ அம்மா

செங்குருதியை வெண்பாலாய்ச்
சேயை செம்மையாய் வளர்த்தெடுக்க
கங்கணங் கொண்டு உடலை உருக்கும்
கருணையுள்ள தெய்வம் நீ அம்மா

மகவை சீராட்டி பாராட்டிக் கேட்க
மடியில் வைத்து நேர்மையை ஊட்டும்
செகத்தினிலே நிகரற்ற ஜோதி
சேவகியே தெய்வம் நீ அம்மா

ரதிப்பிரியா
தரம் - 6
கிளி. மகா வித்தியாலயம்.

# தந்தை மகனுக்குக் கூறும் அறிவுரை



'வாசிப்புப் பழக்கம் - ஒரு மனிதனை பூரணமாக்குகின்றது. அதனாலேயே, முன்னோர்கள் கதைப்புத்தகங்கள், பத்திரிகைகள் வாசித்துப் பழகுமாறு கூறினார்கள். வாசித்துப் பயன்பெறப் பல நூல்நிலை யங்களை அமைத்துள்ளார்கள்.

இந்த நூல்நிலையங்கள் - பணம் கொடுத்துப் புத்தகம் வாசிக்கமுடியாத பாமரமக்களுக்கும் வாசிகக உதவுகின் றன.

பாடசாலையில் ஓய்வு நேரங்களில் வாசிப்பதற்காக, நூல்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, மாணவர் கள் இந்த நூல்நிலையங்களைப் பயன்படுத்தி, வாசிப்புப் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

தினசரிப் பத்திரிகைக்ளை நாம் தினமும் வாசிக்க வேண்டும். ஏனெனில், இதில் முக்கிய செய்திகள், நாட்டு நடப்புக்கள், உலகச்செய்திகள் போன்ற முக்கிய விடயங்கள் இடம்பெற்றிருக்கும். அத்துடன், வாரப் பத்திரிகைகளையும் கட்டாயம் வாசிக்கவேண்டும்.

வாரப் பத்திரிகையில் - விசேட செய்திகள், உலகச் செய்திகள், சிறுவர் பகுதி, மாதர் பகுதி, பொது அறிவுகள், குறுக்கெழுத்துப் போட்டி போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் பிரசுரமாகின்றன.

வார, மாத இதழ்கள், கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள், அறிவு நூலகள் போன்ற பல்வேறுபட்ட நூல்களை எல்லாம் நாம் பணம் கொடுத்து வாங்கி வாசிக்கமுடியாது.

ஆகவே, நாம் ஓய்வு நேரங்கள், விடுமுறை நாட்களில் நூல் நிலையங்களுக்குச் சென்று, இந்தப் புத்தகங்களை வாசிக்கவேண்டும. இதனால், எம்முடைய அறிவு வளரும். தமிழ்மொழி நூல்களை மட்டுமல்ல, ஆங்கில நூல்களையும் வாசிக்க முயற்சிக்கவேண்டும்.

எமக்குக் கிடைக்கும் நேரத்தை, வாசிப்பதில் செலவிட வேண்டும். வாசிப்பதால், நாம் பல்வேறுபட்ட விடயங்களைக் கற்கின்றோம். கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு - அந்தச் சிறப்பைத் தேடித்தருவது வாசிப்புப் பழக்கம்தான்.

வாசிப்பதனால், எம் அறிவு பரந்து, எழுதத் தூண்டும். இதனால், எழுத்தாற்றல் வளரும், பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெறலாம், சிறந்த பேச்சாளராகலாம், உயர்கல்விபெற்று வாழ்வில் சிறப்படையலாம். எனவே, உன் பொன்னான நேரத்தை வாசிப்பில் செலவிட்டு, நல்ல பெறுபேறுகளைப் பெற்று, நல்வாழ்வு வாழ்வாயாக' என - தந்தை தன் மகனுக்கு அறிவுரை கூறினார்.

ஜீவனா இராஜேஸ்வரன்

## மூன்றெழுத்துச் சொற்கள்

எம்மை வளர்க்கும் 'அன்னை' மூன்றெழுத்து. தாயில் உள்ள 'அன்பு' மூன்றெழுத்து. தேவைகளுக்குத் தேவையான 'பணம்' மூன்றெழுத்து. எமது உடம்பிலுள்ள 'உயிர்' மூன்றெழுத்து. இரவில் காணும் 'கனவு' மூன்றெழுத்து. நாம் உண்ணும் 'உணவு' மூன்றெழுதது. நான் விரும்பும் 'கடல' மூன்றெழுத்து. நாம் வாழும் 'தேசம' மூன்றெழுத்து. நாம் இருக்கும் 'இடம' மூன்றெழுத்து. நாங்கள் இருக்கும் 'கதிரை' மூன்றெ ழுத்து.

யோ.திருவரங்கன்
தரம் - 8
தொல்புரம் விக்கினேஸ்வரா
வித்தியாலயம்.

## மாணவ விண்வெளி விஞ்ஞானி

சாத்விக் அகர்வில் (வயது 14). தெற்கு டெல்கியில் ஒரு பாடசாலையில் 10 ஆம் வகுப்பு பயினறு வருகிறான். செவ்வாய்க்கிரகம் தொடர்பாக, அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸா நடாத்தும் ஆய்வுப்பணிகளில் பஙகேற்க, அவனைத் தேர்ந்தெடுத்துள்ளார் கள். கலிபோர்னியாவிலுள்ள நாஸாவின் ஜெட் இயக்க ஆய் வகத்தில் சாத்விக் இருவார பயிற்சி பெற்ற பின்பு, நாஸா விண்வெளி விஞ்ஞானிகளுடன் இணைந்து, அடுதத வருடம் தை மாதம் முதல் பங்குனி மாதம்வரை பணிபுரிய வுள்ளான்!
ஆச்சரியப்படுகிறீர்களா?
உங்களாலும் முடியும் முயலுங்கள்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# ஒரு வரலாற்று நிகழ்வு....

தமிழ் மக்களின் அரசியல் மற்றும் போராட்ட வரலாற்றில் மற்றொரு முக்கிய நிகழ்வு நேற்று பதிவுசெய்யப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சுக் களின் தேக்கநிலைக்குக் காரணமான இடைக்கால நிர்வாகம் தொடர்பான பிரச்சினைக்கு அரசால் முன்வைக்கப்பட்ட, யோசனைகள் அடங்கிய வரைபுக்கு மாற்றாக விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட திட்டவரைபானது, நோர்வே அரசினூடாக இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்ட நிகழ்வே அதுவாகும்.

இங்கு முக்கிய விடயம் என்னவெனில், விடுதலைப் புலி களிடம் அரசு முதலில் வழங்கிய யோசனைகளின் வரைபை அவர்கள் நிராகரிக்கவோ புறந்தள்ளவோ செய்யாது, அத னைப் படித்துவிட்டு, தமிழ்மக்களின் அபிலாஷைகளை, தேவைகளை, சமாதான நகர்வுகளை முன்னெடுக்க அவசிய மான தன்மைகளை, உள்ளடக்கியதான தீர்க்கமான வரை பொன்றை சர்வதேச அரசியல் சட்ட அறிஞர்கள், நிபுணர்கள் ஆகியோரின் ஆலோசனைகளுடன் தயாரித்து, மாற்றுவரைபாக அரசின் பரிசீலனைக்கும், தீர்வுக்குமென கையளித்துள்ளமை யேயாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தவரை போர்வெறியர்கள் என்றும் பயங்கரவாதிகள் என்றும், பல தசாப்தங்களாக மாறி மாறி ஆட்சிபீடம் ஏறிய பேரினவாத அரசுகள் பொய்யான பிரசாரங்களை - தனது பெருமளவிலான வளங்களைப் பயன் படுத்தி சர்வதேச சமூகத்துக்குப் பரப்பிவந்துள்ளமை தெரிந்த விடயமே.

ஆனால், இம்முறை பேரினவாதிகள் ஒருபோதுமே எதிர் பார்த்திராத மாற்றங்களும், திருப்பங்களும் விரைவாகவும், அதிர்ச்சியூட்டும் வகையிலும் சமாதான முயற்சிகளின் முன்னெ டுப்பின்போது ஏற்பட்டுள்ளமையானது, தமிழ்மக்களின் விடுத லைப் போராட்ட வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட மைல்கல் என்றே கூறமுடியும்.

இதுவரையிலும், முன்னைய அரசுகளுடன் தமிழர் தரப்பு மேற்கொண்ட சமாதானத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் அனைத்தும் இந்தியா தவிர வேறு சர்வதேச நாடுகளின் அனுசரணையோ, ஆலோசனையோ, தலையீடோ, மத்தியஸ் தமோ இன்றியே மேற்கொள்ளப்பட்டன.

இந்தியத் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்பாடுகூட இந்த இரு நாடுகளின் தனிப்பட்ட, தேசிய மற்றும் பிராந்திய அரசியல் மற்றும் இராணுவ அபிலா ஷைகள் நிமித்தமே மேற்கொள்ளப்பட்டதாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினையை அதற்கான ஊடகமாகவே இந்தியா, இலங்கை ஆகிய இருதரப்பினரும் பயன்படுத்திக் கொண்டனர் என்பதே உண்மையாகும். இதனால், அந்த உடன்பாட்டின் மூலம் உருவாக்கப்பட்ட இடைக்கால நிர் வாகக் கட்டமைப்பானது அர்த்தமற்றதாகி, சிதைந்து போயிற்று. இப்போதைய சமாதானச் சூழ்நிலை, நோர்வேயின் ஏற்பாட்டுடனும் சர்வதேச நாடுகள் பலவற்றின் ஆதரவு, அக்கறையுடனும் பிரச்சினைக்குரிய இருதரப்பினரும் நேரில் பேசிக்கொள்ளும் முறையில் உருவாக்கப்பட்டமையானது, மாறுபட்ட ஒன்றாகவே உள்ளது.

ஆனாலும், அரச தரப்பினர் புரிந்துணர்வு உடன்பாட்டில் தங்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட பல விடயங்களை - சமா தான நகர்வின் முன்னெடுப்புக்கு, நம்பிக்கையூட்டத் தேவை யான, பல முக்கியமான அம்சங்களைக்கூட நடைமுறைப் படுத்தத் தயங்கியதாலேயே, பேச்சுவார்த்தையைத் தொடர முடியாத தேக்கநிலை உருவாயிற்று.

இதற்கு அரசே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

சர்வதேச சமூகமுமே இதற்குச் சாட்சி.

இந்தத் தேக்கநிலை - புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள் குடியேற்றம், இயல்புநிலையை ஏற்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்களை ஆக்கபூர்வமாக, சிக்கலின்றி நடைமுறைப்படுத்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் அவசியம் பற்றி வலி யுறுத்தப்பட்டபோதே உருவானது.

இத்தனை மாதங்களாக, ஆழமான - நுணுக்கமான அதேசமயம் விரிவானதும், சர்வதேச சமூகத்தின் நிபுணத்துவ ஆலோசனையுடன் கூடியதுமான ஆய்வுக்குப் பின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றுக்கான திட்டவரைபொன்றை விடுதலைப் புலிகள் உருவாக்கி, நோர்வே மூலமாக அரசிடம் கையளித்துள்ளனர்.

இதில், எந்தவிதமான உள்நோக்கமும் அரசியல் தந்தி ரோபாயமும் இருக்காது என்பதற்கு இதனை உருவாக்க பல வகையிலும் முன்வந்து ஆலோசனை வழங்கிய அதே சர் வதேச அரசியல் சட்ட நிபுண சமூகத்தவரே சாட்சி.

இந்த இடைக்கால நிர்வாகம் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வொன்றை அரசியல் பேச்சுக்கள் மூலம் எட்டு வதற்கான ஒரு முன்னோடி நடவடிக்கையே தவிர வேறில்லை.

தமிழ்மக்கள் சமாதானத் தீர்வில் நம்பிக்கை வைக்க இந்தத் தற்காலிகக் கட்டமைப்பை அரசு குறுகிய இனவாத சிந்தனைகளில் இருந்து விடுபட்டு, ஏற்றுக்கொள்ள வேண்டு மென்பது அவசியமாகும்.

இந்தத் தற்காலிக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை அரசு எந்தவகையிலாவது நிராகரிக்க நேரிடுமாயின், நிரந்தர அரசியல் தீர்வென்பது தூரத்துப் பச்சையாக நிரந்தரமாகவே மாறிவிடுமென்பது யதார்த்தமாகும்.

## நாடும் நடப்பும்




செய்தி: தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒற்றுமைக்காக தந்தை செல்வா சதுக்கத்தில் அமைதிப் பிரார்த்தனை

# சம்பள நிலுவைகளை உடன் வழங்காவிடின் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிப்போம்!

## யாழ். போதனா வைத்தியசாலை தாதியர்கள் எச்சரிக்கை

தமது சம்பள நிலுவைகளை உடனடியாக வழங்கவேண் டும் எனவும், இல்லாவிட்டால் தாம் வேலைநிறுத்தப் போராட்டத் தில் ஈடுபடப்போவதாகவும், யாழ். போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு வருடகாலத்திற்கு மேலாக சம்பள உயர்வுகளோ, மேலதிக கொடுப்பனவுகளோ வழங்கப்படவில்லை. இது தொடர்பாக வைத்தியசாலை பணிப்பாளர் ஊடாக அரசிற்கு முறையிடப்பட்டபோதும், இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

ஒரு சில உத்தியோகத்தர்களுக்கு மட்டும் மேலதிக கொடுப் பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு' பாரபட்சம் காட்டுவது அடிப்படை மனிதஉரிமை மீறலாகும் எனத் தெரிவித்து, தாதிய உத்தியோகத்தர்கள் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைச் செய்துள்ளனர்.

இந்த முறைப்பாட்டில் 83 தாதிய உத்தியோகத்தர்கள் ஒப்பமிட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பான விசாரணைகளை உடன் நடத்தி, தமக்கு நீதியான தீர்வைப் பெற்றுத்தரவேண் டும் என அவர்கள் தமது மனுவில் கோரியுள்ளனர்.

இவ்வளவு காலமும் வழங்கப்படாத கொடுப்பனவுகள் அவற் றுக்குரிய வட்டியுடன் சேர்த்து வழங்கப்படவேண்டும் எனவும், அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடின் வேலை நிறுத்தப்போராட்டத்தில் குதிக்கப்போவதாக தாதிய உத்தி யோகத்தர்கள் எச்சரித்துள்ளனர். (ச)

# அனுராதபுர கலாசாலை மாணவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைக்குண்டு வீச்சு!

## பிக்குமார் உட்பட மாணவர்கள் 85 பேர் காயம்

(கொழும்பு)

அனுராதபுரம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பொலி ஸார் மேற்கொண்ட கண்ணீர்ப்புகைக்குண்டுத் தாக்குதலில் பௌத்த பிக்குமார் உட்பட 85 மாணவர்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, அனுரா தபுரம் - சாலியபுர என்னும் இடத்திலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - ஒருவருடகாலமாக மூடப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிக் கலாசாலையில் ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் பீடம் ஒன்றை இயங்குவதற்கு அனுமதிக்குமாறுகோரி, மாண வர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

கடந்த சில நாட்களாக நடைபெற்ற போராட்டத்தில் மாண வர்கள் பலாத்காரமாக ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையினை ஆக்கிரமித்துக்கொண்டனர்.

மாணவர்கள் ஆக்கிரமித்த ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை விட்டுவெளியேறுமாறுகோரி - நீதிமன்று உத்தரவு பிறப்பித்தி ருந்தபோதிலும் மாணவர்கள் அங்கிருந்து விலகமறுத்துள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் மாணவர்கள் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டவேளை, பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இதன்போதே 85 பேர் காயமடைந்தனர். காயமடைந்த 45 பேர் சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (01)

## வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில்

# தெங்கு பயிர்ச்செய்கை நிலையங்களை மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை!

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தெங்குப் பயிர்ச்செய்கை நிலையங்களை மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுவருவதாக, தெங்குப் பயிர்ச்செய்கை அபிவிருத்திச் சபைத் தலைவர் எல்.பெர்னாண்டோ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கைவிடப்பட்ட நிலையில் இருக்கும் தென் னைப் பயிர்ச்செய்கை நிலையங்களை உடனடியாகச் செயற் படவைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக, அவர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தென் னைச் செய்கைக்காக 28 லட்சம் ரூபா பெறுமதியான 70 ஆயிரம் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

இருபது ஆண்டுகள் நடைபெற்ற யுத்தத்திற்குப் பின்னர் வடக்கு - கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கை யின் ஒரு பகுதியாகவே மேற்படி திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

தென்னைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோருக்கு ஆலோ சனை வழங்குவதற்கென, தென்னை அபிவிருத்திச்சபை யாழ்ப் பாணத்தில் கிளை அலுவலகம் ஒன்றினையும் அண்மையில் திறந்துள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இயங்காநிலையில் உள்ள தென்னைப் பயிர்ச்செய்கை நிலையங்களை இயங்கவைக்க நடவடிக்கை எடுத்துள்ளதோடு, மானியம் வழங்கவும் நடவ டிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

2002 ஆம் ஆண்டு வடக்கு - கிழக்குப் பகுதிக்கு உரத்திற் கென 75 ஆயிரத்து 39 ரூபா மானியமாக வழங்கப்படதாக வும் எல்.பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

# இலங்கைக் கலைக்கழக இசை நடனப் போட்டிகள்

இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் இலங்கைக் கலைக்கழக இசை, நடனக்குழு ஒழுங்குசெய்துள்ள - தமிழ் ஆக்க இசை, நடனப் போட்டிகள் இந்த மாதம் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் கொழும்பிலுள்ள இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 5 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். இந்தப் போட்டிகள் 3 பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன. 8 வயது முதல் 12 வயது வரையும் முதற்பிரிவாகவும், 13 வயது முதல் 16 வயது வரையும் இரண்டாவது பிரிவாகவும், 17 வயது முதல் 25 வயது வரையும் மூன்றாவது பிரிவாகவும் இசைத் துறையிலும், நடனத்துறை யிலும் போட்டிகள் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் வெற்றிபெறுவோருக்கு இந்த மாதம் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் கொழும்பு இராமகிருஷ்ணமிஷனில் இடம்பெறும் அரச இசை, நடன விழாவில் பரிசும், விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. போட்டியில பங்குபற்ற விரும்புவோர் வி.குமாரவடிவேல், நிகழ்ச்சி இணைப்புச் செயலாளர் இந்துசயம விவகார அலுவல்கள் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# மக்களின் துன்பங்களைப் போக்காது ஆசனங்களை பாரமாக்கும் பதவியாசை

உரோமாபுரி பற்றியெரியும்போது வீணை வாசித்த நீரோ மன்னன்போல, வடக்கு கிழக்கில் தமிழ்மக்கள் நாளாந்தம் இராணுவத் தாக்குதல்களுக்கும், அடக்கு முறைகளுக்கும் ஆளாகிக்கொண்டிருக்கும்போது- தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியார் இந்தத் தள்ளாத வயதிலும் 'உலகம் சுற்றும் வாலிபன்' மாதிரி, கண்டம்விட்டு கண்டம் சுற்றிக் கொண்டிருக்கிறார்.



ஆனந்த சங்கரி

அதுபற்றிக் கேட்டால் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில், நான் பல நாடுகளுக்குச் செல்லவேண்டியிருக்கிறது. சில பயணங்களையே சொந்தக் காரணங்களுக்காக மேற்கொள்கிறேன் என்கிறார்.

ஆனால், அவர் தன்னை நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுத்த யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களை 'அம்போ' என்று கைவிட்டு விட்டு, உலகம் சுற்றுகிறார் என்பதுதான் அப்பட்டமான உண்மை.

எத்தனை நாட்களுக்கு இப்படிப் பேசிக்கொண்டு உலகம் சுற்றப்போகிறார்? இதுதான் அவரது கடைசி நாடாளுமன்றம் என்ற துணிவில் ஆனந்தசங்கரியார் இப்படி பொறுப்பில்லாமல் நடந்து கொள்கிறாரா? வெந்ததைத் தின்று, வாயில் வந்ததைப் பேசுகிறாரா?

இம்முறை ஆனந்தசங்கரியார் கனடாவில் முகாமிட்டபோது, அவரை வழக்கமாகப் போய்ப்பார்க்கும் கூட்டணிப் பிரமுகர்கள் யாரும் போய்ப் பார்க்கவில்லையாம். தொலைபேசியில்கூட கூப்பிட்டு குசலம் விசாரிக்கவில்லையாம். இந்த நன்றிமறந்த சம்பவத்தை ஆனந்தசங்கரியாரே தனது நண்பர் ஒருவருக்குத் தொலைபேசியில் சொல்லி அழுதிருக்கிறார்.



ஆனாலும், ஆனந்தசங்கரியாருக்கு ஒரு ஆறுதல் - ஈ.பி.டி.பியைச் சேர்ந்தவர்கள், அவரை நேரில் கண்டு சுகம் விசாரித்தார்களாம்! விடுதலைப் புலிகளுக்கு எதிராக அவர் போர்க்கொடி தூக்கியிருக்கும் அவரது 'வீரத்தை' பாராட்டி முதுகில் தட்டிக்கொடுத்தார்களாம்!

ஆனந்தசங்கரியார் கனடாவில் ஒரு வானொலிக்குச் செவ்வி கொடுத்தார். அப்போது 'நான்தான் கூட்டணித் தலைவர். ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களே எனக்கு எதிராகச் செயல்படுகிறார்கள். ஆனால், அவர்களால் என்னை ஒன்றும் செய்யமுடியாது. கடைசியாக நடந்த பொதுச் சபைக் கூட்டத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப் போவதாகச் சொன்னார்கள். ஆனால், அப்படி யாரும் கொண்டு வரவில்லை. கொண்டு வந்திருந்தால் அது பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டிருக்கும்'

'உண்மையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்துக்கு, பதில் நம்பிக்கைத் தீர்மானம் கொண்டுவரப்பட இருந்தது. நான்தான் தலையிட்டு அது தேவையற்றது எனச் சொல்லிவிட்டேன்'

'கடந்த பொதுத்தேர்தலில் அதிகப்படியான விருப்பு வாக்குகள் பெற்ற வேட்பாளர் நான் ஒருவன்தான்' எனத் தெரிவித்தார்.

பின்னர் ஒருவாரம் கழித்து இலண்டனிலிருந்து பி.பி.சி. தமிழோசை செய்தியாளர் ஆனந்திக்குச் செவ்வி கொடுத்தார். அதிலும், கனடாவில் சொல்லியவற்றையே திருப்பி ஒப்புவித்தார்.

'நான் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தலில் 36,000 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றவன். இவர்கள் யார் என்னை பதவி விலகச்சொல்ல? அதெல்லாம் நடக்காது. அவர்கள் அப்படி ஒருமுறை முயற்சி செய்து தோற்றுப் போனவர்கள்' எனக் கூறினார்.

'நான் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் அதிக விருப்பு வாக்குப் பெற்றவன், மொத்தம் 36,000 வாக்குகள் பெற்று வெற்றிவாகை சூடியவன்' என்று இன்னும் எத்தனை காலத்துக்குத் ஆனந்தசங்கரி பஜனை பாடிக்கொண்டிருப்பாரோ தெரியாது.

அண்மையில் ஒருவாரத்தில், அடுத்தடுத்து யாழ்ப்பாணத்தில் ஆறுமுறை இராணுவவண்டி - பொதுமக்கள் மீது மோதிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் ஒரு சம்பவத்தில் இரண்டு தமிழர்களது உயிர்போயிற்று. அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த பொதுமக்களை - இராணுவத்தினர் அடித்துத்துவைத்து எடுத்தார்கள். இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூடு, பொல்லடிக்கு இலக்காகி பல பொதுமக்கள் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இராணுவ வாகனம் ஒன்று தமிழர்கள் மீது மோதியது இது முதல் தடவை அல்ல. இதற்கு முன்னர் இதுபோன்ற 52 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதைவிட களுத்துறை சிறைச்சாலையில் விசாரணையும் இல்லை, வழக்கும் இல்லை என்றநிலையில், பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட தமிழர்கள் தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். ஒன்றுக்குப் பத்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவிட்டார்கள். ஆனால், அவர்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மீனவர்கள் - நாளாந்தம் இராணுவத்தினரால் தாக்கப்படுகிறார்கள். அவர்களது வள்ளங்கள் உடைக்கப்படுகின்றன, வலைகள் அறுக்கப்படுகின்றன. தொழில் செய்வதற்கு நேரக்கட்டுப்பாடு, தூரக்கட்டுப்பாடு, பாஸ் முறை என நீடிக்கிறது.



இந்த மீனவர்கள் கடலையே முழுதாக நம்பிவாழும் ஏழை, எளிய மக்கள். வேறுதொழில் செய்யத் தெரியாதவர்கள். கடந்த ஒக்ரோபர் 22 ஆம் திகதி மாலை, பருத்தித்துறை முனைக் கடற்கரையில் பீற்றர் மாறன் (வயது 23) என்ற மீனவ இளைஞர் ஒருவர் படையினரால் தாக்கப்பட்டார். அந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு திரண்ட மக்கள் மீது, படையினர் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதில் பொதுமக்கள் நால்வர் காயமடைந்தனர். மற்றும் பன்னிரண்டு பேர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

முனைக் கடற்பரப்பில் தொழில் செய்யச் செல்லும் மீனவர்கள், சென். தோமஸ் கடற்படைச் சோதனைச்சாவடியில் படையினரின் அனுமதியைப் பெற்றுக் கடலுக்குச்செல்வது வழக்கம். குறித்த தினத்தில் பீற்றர் மாறன் காய்ச்சல் காரணமாக மாலையே கரைக்குத் திரும்பிவிட்டார். ஆனால், திரும்பியது குறித்து படையினரிடம் அவர் பதியவில்லை. இதனைக் காரணம் காட்டி, சென். தோமஸ் சோதனைச் சாவடியில் கடமையிலிருந்த படையினர் அவரைத் தாக்கினார்கள். உதவிக்குப் போன தந்தையாரும் தாக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி, செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்களும் படையினரால் அச்சுறுத்தப்பட்டனர். புகைப்படம் எடுக்க விடாமல் தடுக்கப்பட்டனர்.

வடமராட்சி மீனவர் சங்கப் பிரதிநிதிகளும், முனைப் பகுதிக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரியும் அங்கு வந்து சேர்ந்ததை அடுத்து, பதட்ட நிலை தணிக்கப்பட்டது. நடந்த சம்பவம் குறித்து அடுத்த நாள் பக்கச் சார்பற்ற விசாரணை நடைபெறும் என்று இராணுவ அதிகாரி - மீனவர் சங்கப் பிரதிநிதிகளிடமும், பொதுமக்களிடமும், அங்கு நின்றிருந்த பத்திரிகையாளர்களிடம் கூறினார். இதனை அடுத்து அங்கு சுமுக நிலை ஏற்பட்டது.

எனினும், சற்றுநேரம் கழித்து அங்கு திரண்டுவந்த இராணுவத்தினர், அங்கிருந்த பொதுமக்களைத் தாக்கினார்கள். அப்பகுதி வீடுகளில் இருந்தோரும் தாக்கப்பட்டனர். மோதலில் காயமடைந்த இருவர் - பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். கடற்கரையை அண்டி அமைந்திருந்த பொதுமக்களின் இரு கடைகளும் உடைக்கப்பட்டன. அங்கிருந்த தளபாடங்கள், பொருட்கள் அடித்து நொருக்கப்பட்டன. இரண்டு படகுகள் அலவாங்கால் குத்தி நாசமாக்கப்பட்டன. கரையில் தரித்து நின்ற இன்னொரு படகும், கட்டுமரமும் - இராணுவத்தினரால் அவிழ்த்து விடப்பட்டன.

தாக்குதலுக்கு இலக்கான பொதுமக்களிடம், அவர்களது

## கனடாவிலிருந்து நக்கீரன்

அனுபவங்களை நேரில் பதிவுசெய்து கொண்டிருந்த செய்தியாளர் ஒருவரின் ஒலிப்பதிவுக்கருவி படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

ஒக்ரோபர் 25 ஆம் திகதி மன்னார், உயிலங்குளம் பகுதியில் வீட்டில் தனிமையில் இருந்த 32 வயதுடைய தமிழ்ப் பெண்ணை - கொச்சைத் தமிழில் உரையாடிய சிங்கள பொலிஸார் இருவர், மடக்கிப்பிடித்து, அவரின் வாயில் துணியைத் திணித்து, அவ்விடத்திலேயே அவர் மீது பாலியல் வல்லுறவில் ஈடுபட்டனர். பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்ட பெண் அடுத்த நாள் அதிகாலை மருத்துமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிசிச்சைக்காக அவர் அனுராதபுர மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

பொலிஸாரின் மிருகத்தனமான இந்தத் தாக்குதலைக் கண்டித்து உயிலங்குளம் பகுதி மக்கள் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடத்தினார்கள். அத்துடன், உயிலங்குளம் பொலிஸ் காவலரணை அந்த இடத்தைவிட்டு உடனடியாக அகற்றுமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தார்கள்.

ஒக்ரோபர் 15 ஆம் திகதி காலை தென்மராட்சி - மந்துவில் கிழக்கில் படைத்தரப்பின் வாக்குறுதியை நம்பி, மீளக்குடியமரச் சென்ற பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள். கடந்த செப்ரெம்பர் 23 ஆம் திகதி இப்பகுதி மக்கள் - வரணி இராணுவ அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு, பலாலி படைத் தலைமை அலுவலக உயர் அதிகாரிகளால் ஒக்ரோபர் 15 ஆம் திகதி உரிமையாளர்களிடம் வீடுகள் கையளிக்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடந்த 14 ஆம் திகதி பகல் அப்பகுதி வீடுகளிலிருந்து படையினர் வெளியேறினர். ஆனால், அன்று இரவே படையினர் மீளமுகாமிட்டு விட்டனர். படையினர் வெளியேறிவிட்டதாக நம்பிய காரணத்தினால்தான் குடியிருப்பாளர்கள் தமது உடைமைகளுடன் சொந்த வீடுகளில் மீளக் குடியமரச் சென்றனர்.

இந்த விடயத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் எவரும் எந்தவித அக்கறையும் காட்டவில்லை என, சம்பந்தப்பட்ட மக்கள் கவலை தெரிவித்தனர்.

ஆனந்தசங்கரி தனக்கு வாக்களித்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்த இந்த மக்களின் அல்லல்கள், அனர்த்தங்கள், அவலங்கள் பற்றி கிஞ்சித்தும் கவலையோ, அக்கறையோ கொள்வதில்லை. 'யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிக விருப்பு வாக்குப் பெற்ற ஒரே நாடாளுமன்ற உறுப்பினர் நான்தான்' என்று மார்தட்டும் ஆனந்தசங்கரி வெட்டி வீரம்பேசுவதில் தனது நேரத்தையும், நினைப்பையும் செலவிடுகிறார்.

யாழ்ப்பாண நூல் நிலையத் திறப்பு விழாவை ஒத்திப் போட்டதைக் கண்டித்து, நான்கு பக்க அறிக்கைவிட மட்டும் ஆனந்தசங்கரியாருக்கு நேரம் இருக்கிறது!



யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்று 'தேடப்படுவர்' பட்டியலில் முதலில் இருப்பவர் ஆனந்தசங்கரியார். அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட கூட்டணிக்கிளைகள் ஆனந்தசங்கரியார், பதவி விலகவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்றன.

இந்தக் கூட்டணி உறுப்பினர்கள் பகல் கனவு காண்கிறார்கள். ஆனந்தசங்கரியார் அவ்வளவு சுலபத்தில் பதவியை உதறித் தள்ளிவிடுவாரா என்ன?

எப்படி யார் எழுதினாலும் அவர் அதைப்பற்றிக் கிஞ்சித்தும் கவலை கொள்வதில்லை. 'நீ யார் கேட்பதற்கு, நான் யார் சொல்வதற்கு' என்ற போக்கில் நடந்து கொள்கிறார். இன்னொருவர் என்றால் - ரோச மானத்தினால் உயிரையே விட்டிருப்பார்.

ஆனால், ஆனந்தசங்கியாருக்குத்தான் ரோச மானம் துளியும் இல்லையே! பாடையிலே ஊர் சுற்றும்போதும்- 'பதவி பதவி' எனப் பாடிக்கொண்டே சுற்றவேண்டும்! மேடை யிலே உடல் வேகும்போதும் - 'கதிரை கதிரை' எனக் கத்திக்கொண்டே வேகவேண்டும்! ஓடையிலே சாம்பல் கரையும் போதும்- 'நானே தலைவன்' எனச் செபித்துக்கொண்டே கரையவேண்டும்!

இவைதான் அவரது ஆசைகள். பிறந்ததன் பலன் இவையே என அவர் நினைக்கிறார் போலும்.

### ஐ.நா.வின் உதவியுடன் சியராலியோவில்

# 13 குற்வாளிகளுக்கெதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்!

ஐக்கிய நாடுகளின் அனுசரணையுடன் 'சியராலியோவில்' 13



போர்க்காலத்துக் குற்றவாளிகளுக்கு எதிராக, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. லைபீரியாவில் முன்னாள் ஜனாதிபதி சாள்ஸ் ரெயிலர் அயல்நாடான சியராலியோ போராளிகளுக்கு ஆதரவு வழங்கியதாக குற்றம்சுமத்தப்பட்டுள்ளார். இதுவரை 13 போர்வரை குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்கள். 50 ஆயிரம் மக்களின் மரணத்துக்கும் கைகால் இழப்பிற்கும் காரணமாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

குற்றம் சுமத்தப்பட்டவர்களில் லைபீரிய ஜனாதிபதி சாள்ஸ் ரெயிலரும், நைஜீரியாவில் ஆடம்பர ஜனாதிபதி மாளிகையொன்றில் வசிப்பதாக பி.பி.சியின் தென்னாபிரிக்க செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், முன்னாள் உள்நாட்ட மைச்சர் சாம்கிங்காரோமன் தனிப்பட்ட படையொன்றை வைத்திருந்ததாகவும் மேலும் சிறுவர்களையும் படை



யில் வைத்திருந்ததாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. சென்ற மாச் மாதம் ரோமன் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

### கொலம்பிய தீவிரவாதிகளால்

# கடத்தப்பட்ட பயணிகளை விடுவிப்பதில் சிக்கல்!

கொலம்பியாவில் தீவிரவாதிகளினால் கடத்தப்பட்டிருந்த உல்லாசப் பயாணிகளை விடுவிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதாக, அவர்களை விடுவிப்பதில் சமரச முயற்சியில் ஈடுபட்டிருந்த கத்தோலிக்க ஆச்பிசப் 'லூசிஷ் அல்பேற்றோ சிரல்டோ' தெரிவித்துள்ளார்.



இடதுசாரிப்போராளிகள் ஏழு உல்லாசப்பிரயாணிகளையும் ஒரே நேரத்தில் விடுதலைசெய்வதற்கு மறுத்துள்ளார்கள்.

முதலாவது பயணக்கைதியை அடுத்தவாரம் விடுதலை செய்வதற்கு தேசிய விடுதலைப்படை முன்வந்துள்ளது. இதனிடையே அரசினால் சிறைப்படுத்தப்பட்டுள்ள தேசிய விடுதலைப் படையின் அங்கத்தவர் 'பிரசிஸ்கோ' கலலுடன் சமரசப் பேச்சில் ஈடுபட்ட பிசப்மெடலின் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மீதியாக உள்ள உல்லாசப்பிரயாணிகளை விடுவிப்பதற்கு நாட்கள் செல்லலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அமெரிக்கப்படையினர், எரிந்து கொண்டிருக்கும் ஈராக்கிய பொலிஸ் காரினை ஜீப்பில் கடந்து சென்றுகொண்ருப்பதைப் படத்தில் காணலாம்.



ரம்ழான் பண்டிகையின் நேற்றைய தொழுகையயின்போது குர்ஆனை வாசிக்கும் பலஸ்தீனிய சிறுமிகள்.

### ஈராக்கிலுள்ள ஐ.நா அதிகாரிகளை சைப்பிரசிற்கு மாற்றத் திட்டம்

ஈராக்கில் உள்ள சர்வதேச அமைப்புகளின் அதிகாரிகளை, பாக்தாத்திலிருந்து சைப்பிரஸிற்கு மாற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் திட்டமிட்டுள்ளது. இவர்களை மீண்டும் எப்போது ஈராக்கிற்கு அனுப்புவதென பின்னர் தீர்மானிக்கப்படும் என ஐக்கிய நாடுகளின் அதிகாரிகள் தெரிவித்தார்கள். பாக்தாத்தில் கடமை புரியும் 18 சர்வதேச பணியாளர்கள், தற்காலிகமாக அகற்றப்பட உள்ளனர். அதேநேரத்தில் 40 இற்கும் அதிகமான வெளிநாட்டு அதிகாரிகள் தொடர்ந்தும் கடமைபுரியவுள்ளார்கள்.

### ஈரானின் அணுவாயுதத் திட்டங்கள்

# சர்வதேச அணுசக்தி அமைப்பு வெளியீடு!

சர்வதேச அனுசக்தி அமைப்பு ஈரானின் அணுஆயுத திட்டங்களை வெளிப்படுத்துவதற்கான கால எல்லையான வெள்ளிக்கிழமைக்கு முன்பே



அது தொடர்பான தகவல்களைத் தெரிவித்துள்ளது. தமக்கு கிடைத்த தகவல்களைப் பரிசோதித்து முடிவு தெரிவிப்பதற்கு நாட்கள் செல்லலாம் என அணுசக்தி அமைப்பின் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

இவற்றைவிட எந்த நேரத்திலும் ஈரானில் உள்ள அணுசக்தி அமைப்பினை ஐக்கிய நாடுகளின் பரிசோதகர்கள் சோதனையிடுவதற்கான, பிரத்தியேகமான ஒப்பந்தத்திலும் ஈரான் கைச்சாத்திட்டுள்ளது.




ஈரானின் ஒத்துழைப்பை சர்வதேச அணுசக்தி அமைப்பு பாராட்டியுள்ளது.

பிரான்ஸ் பத்திரிகை ஒன்று தெரிவித்த கருத்தில் உலகில் 35 இற்கும் 45 இற்கும் இடைப்பட்ட நாடுகள் அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் ஆற்றல் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

# மலேசியப் பிரதமர் மகதீர் முகமட் நேற்று பதவியிலிருந்து விலகினார்

ஆசியாவில் நீண்டகாலம் பிரதமர் பதவியிலிருந்த மலேசியப் பிரதமர் மகதீர் முகமட் நேற்று அரச மாளிகையிலுள்ள பள்ளிவாசல் ஒன்றில் நடைபெற்ற பிரார்த்தனையின பின், தனது பதவிவிலகல் பற்றி மலேசிய மன்னர் சையீட் கிரயுடீன் முன் சம்பிரதாயபூர்வமாகத் தெரிவித்தார்.

'உதவிப்பிரதமர் அகமத் படாவி' பிரதமர் பதவிக்கு சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

78 வயதுடைய மகதீர் 22 ஆண்டுகள் ஆட்சிப்பீடத்தில் இருந்தார். இவர் இஸ்லாமிய நாடுகளிடையே பிரபல்யம் பெற்றிருந்தார். இவரின் பதவிவிலகல் தொடர்பாக மேற்கு நாடு கள் எதுவித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை.

## உலக நோக்கு

### அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள்

# ஈராக்கினுடைய புனர்நிர்மாணத்திற்காக 87.5 பில்லியன் டொலரை வழங்கினர்!



அமெரிக்க நாடாளுமன்றத்தின் அங்கத்தவர்கள் நேற்று 87.5 பில்லியன் டொலர்களை ஈராக்கின் புனர்நிர்மாணத்திற்கு நன்கொடையாக வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளனர். இதற்கு ஆதரவாக, 298 வாக்குகளும், எதிராக 121 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இது அதிபர் புஷ்சிற்கு கிடைத்த வெற்றியாகவே கருதப்பட்டுள்ளது.

இந்நிதி, ஈராக்கில் கடமைபுரியும் அமெரிக்கப் படையினரின் தேவைகளுக்கும், அந்நாட்டினைக் கட்டியெழுப்புவதற்கும் பாவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே - இந்நிதியை கடனாகக் கொடுக்க முன்வந்தால், வீட்டோ அதிகாரத்தை பிரயோகிக்கப போவதாக அமெரிக்கா அறிவித்திருந்தது.

கடனாக, இந்நிதியை வழங்கினால், ஈராக்கின் மீதான அமெரிக்காவின் நோக்கத்தை மாசுபடுத்துவதாகவும், நீண்டகாலம் அமெரிக்க படைவீரர்கள் அங்கு நிலைகொள்வதற்கு வழிவகுக்கவும், ஈராக்கின் கடன் சுமையை அதிகரிக்கவும், செய்யலாம் எனவும் கூறப்பட்டது.

### அணுவாயுத பேச்சிற்கு வடகொரியா உடன்பாடு

அமெரிக்காவுடனும், அதன் நேச நாடுடனும் வட கொரியாவின் பொய்யாங்கில் புதிய அணுஆயுத பேச்சுவார்த்தைகளுக்கான உடன்பாடு



எடுக்கப்பட்டுள்ளதாக, தென்கொரிய வெளிநாட்டமைச்சர் யூன் யங்குவான் வெள்ளியன்று தெரிவித்தார்.

அணுஆயுத பிரச்சினை, உயர் மட்டத்திலான பேச்சுவார்த்தைக்கு முன்னெடுத்துச் செல்வதற்கான சாத்தியங்களை, வெளிப்படுத்தியுள்ளதாக மேலும் அவர் தெரிவித்தார். இப பேச்சுவார்த்தைகளில் பாதுகாப்பு, பொருளாதாரம், ஆகிய பிரச்சினைகளை நல்ல முறையில் முன்னெடுத்துச் செய்யப்படாமல், வடகொரியா தனது அணுஆயுதத் திட்டங்களை விட்டுவிடலாம் என, தென்கொரிய வெளிநாட்டமைச்சர் 'யூன்' தெரிவித்தார்.

### ஈராக்கிய சண்டையில்

# சக வீரரை காப்பாற்றியமைக்கு பிரிட்டிஷ் படைவீரருக்கு விருது!



ஈராக்கியச் சண்டையின்போது, இரண்டு பிரித்தானிய வண்டிகள் தவறுதலாக அமெரிக்கப் போர்க் கப்பல்களினால், பஷ்ணாவில் நடத்தப்பட்ட தாக்குதலில், தன்னுடன் பிரயாணம் செய்த படையினர் இருவரில் ஒருவரைக் காப்பாற்றிய பின், மற்றையவரை காப்பாற்றுவதற்கு முயற்சி செய்தபோது, மீண்டும் தாக்குதலுக்குள்ளானபோதும் வீரத்துடன் போராடியமைக்காக ஜோசப் குரெஷ் எனப்படும் விருதை 19 வயதுடைய டூப்பர் கிரிஷ்தோப்பர் பிரித்தானிய அரசிடமிருந்து பெற்றுள்ளார்.

இப்பரிசு வீர செயல்களுக்கு கொடுககப்படும் இரண்டாவது சிறந்த பரிசாக கணிக்கப்படுகின்றது. போரின் போது வெளிப்படுத்திய துணிச்சலுக்காக 374 படையினர் பிரித்தானிய அரசியிடம் விருது பெற்றுள்ளார்கள்.

50 பொதுமக்களும் அரசியிடம் இருந்து விருதுகள் பெற்றுள்ளார்கள்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கிண்ணியா சம்பவங்கள் குறித்து நேற்று பதுமன் - சுனில் தென்னக்கோன் பேச்சு!

## நாற்சந்தி

கொழும்பிலிருந்து வெளிவரும் தி ஐலண்ட் பத்திரிகையை தெரியும் தானே...

தமிழர், தமிழர் உரிமை, தமிழரின் விடுதலைப் போராட்டம் ஏன் தமிழ் என்றாலே அவர்களுக்கு 'அலர்ஜி' அதாவது அந்தப் பத்திரிகைக்காரர்களின் இனவாத அணுகுமுறை இவற்றை ஏற்றுக்கொள்வது கிடையாது. தமிழர்கள் என்றால் பொட்டுவைத்த புலிகள் என்பதே அவர்களின் தீர்க்கமான முடிவு. அப்பத்திரிகையில் வெளியாகும் செய்திகளை உன்னிப்பாகக் கவனித்தால், இந்த உண்மைபுரியும் இதனைப் பற்றி எவ்வளவோ கூறமுடியும்.

அவர்களின் பத்திரிகா தர்மம் அப்படித்தான். விட்டுவிடுவோம்.

ஒன்றை மட்டும் கூற வேண்டும்.

கொழும்பில் நடைபெற்ற - சிஹல உறுமயவின் ஆதரவாளர்களால் குழப்பம் ஏற்பட்ட கலைக்கூடல் நிகழ்வை அவர்கள் தமது பத்திரிகையில் பொங்கு தமிழ் நிகழ்வு என்றே பிரசுரித்தார்கள்.

கலைக்கூடல் அழைப்பிதழில் விளம்பரங்களில், அது தொடர்பான பிரசுரங்கள் அனைத்தும் சிங்கள மொழியிலும் வெளியிடப்பட்டது.

அவற்றில் 'பொங்குதமிழ' என்று அர்த்தம் காட்டும் எந்தச் சொல்லுமே கிடையாது.

ஐலண்ட் பத்திரிகைக்கு மட்டும்தான் அது பொங்குதமிழாகத் தெரிந்திருக்கிறது. வினோதம் தான்!

சரி இனியாவது ஐலண்டின் இனவாத முகத்தை உண்மையான பௌத்த சிங்கள மக்கள் புரிந்து கொள்வார்களா...? அங்கு சிந்திய சிங்களக் கலைஞர்கள், படைப்பாளிகள், அறிஞர்களின் இரத்தம் எதனை அவர்களுக்கு உணர்த்தப்போகிறது?

'தி ஐலண்ட்' இந்தத் தீவை இனவெறியாளர்கள் இரத்தத்தீவாக மாற்றுவதற்கு உதவுகிறதா என்பதே எனது சந்தேகம் என்கிறார் ஒரு ஆசிரியர்.

## ஏ-9 வீதிப் புனரமைப்பில்...

யில் தமிழீழ காவல்துறையினர் ஈடுபட்டிருந்தனர்.

அவ்வேளை நேற்று முன்தினம் பிற்பகல் சுமார் 4.30 மணியளவில், சந்தேகத்தின்பேரில் வாகனம் ஒன்றினை மறித்து சோதனையிட்டபோது அந்த வாகனத்தில் இருந்தவர்கள் தாம் ஏ-9 வீதி புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் என்றும் - மிக அவசரமாகச் செல்லவேண்டும் என்றும், சந்தேகத்துக்கு இடமான முறையில் மிகவும் பதற்றத்துடன் கூறிவாகனத்தை எடுத்துச் செல்ல முற்பட்டனர்.

இதனால், மேலும் சந்தேகமடைந்த காவல்துறையினர் அந்த வாகனத்தை நன்கு சோனையிட்டபோது அந்த வாகனத்தில் ரி-56 ரக துப்பாக்கி ஒன்று உரைப்பையினுள் ஒளித்து உருமறைப்புச் செய்யப்பட்ட நிலையில் காணப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட வாகனம், மற்றும் வாகனத்தில் சென்ற அனைவரும் கைதுசெய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டபோது இவர்கள் தென் பகுதியைச் சேர்ந்த சிங்கள இனத்தவர்கள் என்றும் பரந்தன் பிரதேசத்தில் வீதிப் புனரமைப்பில் ஈடுபட்டுவரும் 'சதேன் குறூப்' நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி காவல்துறையினர் மேற்கொண்டு வருவதுடன், கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

## ஜனாதிபதிக்கா? பாதுகாப்பு...

ரணை நேற்று பூர்த்திசெய்யப்பட்டது.

மனுமீதான விசாரணைகளை பூர்த்திசெய்துள்ள உயர்நீதிமன்றம் அது தொடர்பான இறுதித் தீர்ப்பை அடுத்த 10 நாட்டுகளுக்குள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளிக்க இருப்பதாக நேற்று அறிவித்தது.

இதன்போது ஜனாதிபியின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எச்.எல்.டி.சில்வா நாட்டின் இறைமைக் காக்கும் வகையில் முழுமையான நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது. எனவே, அவருக்கே படைத்தலைமை காலநீடிப்பு உட்பட அதிகாரங்கள் இருப்பதாகச் சுட்டிக்காட்டினர்.

பாதுகாப்பு அமைச்சர் என்பவர் ஜனாதிபதியின் பிரதிநிதியாக செயற்படமுடியும். 1977 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின்படி இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவர் வாதிட்டார்.

சட்டமா அதிபர் கமலசபேசன் தன் விவாதத்தில் அரசியல் அமைப்பின்படி பாதுகாப்பு அமைச்சருக்கு சில அதிகாரங்கள் உண்டு என தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரம் இருக்குமானால் ஏன்? பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணியிடம் வினாவினார்.

இதற்குப் பதிலளித்த இவர் சகவாழ்வு அரசாங்கம் என்ற அடிப்படையிலேயே இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதனையடுத்து கருத்துத் தெரிவித்த பிரதம நீதியரசர் சரத் என். சில்வா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தமது அதிகாரத்தை உரிய ம்றையில் பயன்படுத்தாது விட்டால் அது அரசியலமைப்பை மீறும் செயலாகும். எனவே அவர் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்களில் தமது பொறுப்புக்களில் இருந்து விலகிக்கொண்டார்.

இந்த அடிப்படையில் அவருக்கு எதிராக குற்றவியல் .பிரேரணை கொண்டுவரமுடியும் எனவும் பிரதம நீதியரசர் குறிப்பிட்டார்.

மஹஜன சம்பத
பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1560 திகதி: 31.10.2003

வெற்றி இலக்கங்கள்

| P | 3 | 0 | 1 | 3 | 1 | 6 |
|---|---|---|---|---|---|---|

(திருகோணமலை)

திருகோணமலை கட்டைப்பறிச்சான் சூனியப்பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையேயான சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தரப்பில் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன், திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோரும், இராணுவத் தரப்பில் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், பிரிகேடியர் ஷகிர் உட்பட பலர் கலந்து கொணடனர்.

திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் அட்பேள் பேகானன், பிரதித்தலைவர் ஹேரட்ஸ் பேர்ட் ஆகியோர் முன்னிலையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மூதூரில் நடைபெற்ற மூன்றாவது கூட்டம் இதுவாகும்.

திருகோணமலை மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் பதவியேற்ற பின்பு நடைபெற்ற முதற்சந்திப்பு இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் கூட்டத்தில், மூதூர் கிண்ணியா பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது. (04,10)

## நோர்வே...

அயர்லாந்திலும் வைத்து சர்வதேச சட்டநிபுணர்களின் ஆலோசனைகளுடன் புலிகளால் தயாரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

புலிகளின் திட்டவரைபைப் பெற்றுக்கொண்ட நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் கருத்துத் தெரிவிக்கையில் -

விடுதலைப் புலிகள் சமாதானத்தின்மீது எந்தளவுக்கு நேர்மையாக இருக்கிறார்கள் என்பதை இந்தத் திட்டவரைபைக் கையளித்ததன் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்கள் எனக் குறிப்பிட்டார்.

புலிகளின் திட்டவரைபை விமானப்படையின் விசேட ஹெலிகொப்டர் மூலம் உடனடியாகவே கொழும்புக்கு எடுத்துச்சென்ற நோர்வே தூதுவர் - நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸிடம் அதனைக் கையளித்தார்.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு நேற்றுமாலை சென்ற நோர்வே தூதுவர் பிறட்ஸ்கர் அங்கு வைத்தே திட்டவரைபை அவரிடம் கையளித்தார்.

திட்டவரைபில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து நோர்வே தூதுவர் கருத்து எதையும் வெளியிடவில்லை.

இந்தத் திட்டவரைபு தொடர்பாக விடுதலைப் புலிகளின் கருத்து வெளியாகும் வரை அதன் இரகசியத்தைப் பேணும் முழுப்பொறுப்பும் அரசையே சாரும். விடுதலைப் புலிகள் அரசாங்கத்திற்கு யோசனைகளை முன்வைத்திருப்பது முக்கிய விடயம். நாங்கள் எல்லோரையும் போன்று அந்த யோசனைகளை ஆராயவுள்ளோம் என்று நோர்வே தூதுவர் தெரிவித்தார்.

தமது யோசனைகள் குறித்து ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் பொருட்டு, கிளிநொச்சியில் இன்று காலை செய்தியாளர் மாநாடு ஒன்று நடத்தப்படும் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை - புலிகளின் திட்டவரைபினை முழுமையாக ஆராய்ந்த பின்னர், அரசின் சார்பில் இன்று காலை அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று, அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

அத்துடன், திட்டவரைபின் பிரதி ஒன்று பிரதமரின் அலுவலகம் ஊடாக ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படும் என்றும் - அதேபோன்று ஏனைய அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் பிரதிகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

# சுன்னாகம் வீதி விபத்தில் மயக்கநிலையில் வயோதிபர்!

(வண்ணை)

சுன்னாகம், கே.கே.எஸ் வீதிப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி வயோதிபர் ஒருவர் சுயநினைவிழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

சுன்னாகத்தைச் சேர்ந்த க.தர்மலிங்கம் (வயது-70) என்ற வயோதிபரே காயமடைந்தார். மோட்டார் சைககிள் செலுத்திச் சென்ற ப.உதர்மன் (வயது-19) என்பவரும் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையிலும், க.சிவரதன் (வயது-19) என்பவர் தெல்லிப்பழை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (111)

# திருகோணமலை துறைமுகமருகே படகுடன் நான்கு பேர் கைது!

(திருகோணமலை)

சம்பூரிலிருந்து திருகோணமலை நோக்கி வந்த கண்ணாடி இழைப்படகொன்றினை கடற்படையினர் கைப்பற்றினர்.

கடற்படையினரின் துறைமுகத்திற்கு அருகில் இந்தப்படகு வந்ததாலேயே அதிலிருந்து நால்வரைத் தாம் கைதுசெய்து துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக கடற்படையினர் தெரிவித்தனர்.

சம்பூரில் இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் செயற்பாடுகளை பார்த்துவிட்டு இந்தப்படகில் வந்த பஞ்சவர்ணம், பிருந்தாவனன் ஆகிய செஞ்சிலுவை சங்க ஊழியர்களும், படகோட்டியும் மற்றுமொருவருமே இவ்வாறு கடற்படையால் கைது செய்யப்பட்டவர்களாவர். (0...)

## கண்ணிவெடி...

மற்றும் அமெரிக்க தூதரக சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த கண்ணிவெடி அகற்றும் பயிற்சித்திட்டத்தில் முதற் குழுவில் 15 அதிகாரிகள் உட்பட 125 படையினர் அமெரிக்க நிபுணர்களிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு நடாத்தும்

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் 2003 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச முன்னோடிக் கருத்தரங்கு

இடம்: யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டபம்

காலம்: 2003.11.02 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம்

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவ, மாணவிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை வழங்குவோர்

ஹரிஹரனன் பிறிண்டேர்ஸ்

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

செலான் வங்கி
SEYLAN BANK LIMITED
டிக்கிரி கணக்கு
புதிதாக டிக்கிரிக் கணக்கு ஆரம்பிக்க விரும்புபவர்கள் கருத்தரங்கு மண்டத்தில் ஆகக்குறைந்தது 100 ரூபா செலுத்தி ஆரம்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

BANK OF CEYLON
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

யாழ் நகரில் விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்..!!!!!

1.பழுதடைந்த பழைய படங்களை நவீன முறையில் புதுப்பித்து மெருகூட்டல்
2.நெகட்டிவ் இல்லாமல் படத்தில் இருந்து படத்தைப் பிரதியாக்கம்செய்தல்
3.டிஜிட்டல் கமராவில் இருந்து எடுக்கப்படும் படங்களைப் பிரதியாக்கம் செய்தல்
4.அல்பத்திற்கான முகப்பு அட்டைப்படங்களைத் தயாரித்தல்

ஆகிய சேவைகளை வாடிக்கையாளர்களின் நன்மை கருதி விஸ்தரித்துள்ளது.

Vista Vision
விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்,
52,பலாலி வீதி,யாழ்ப்பாணம்.
☎:021-2225187

FUJIFILM

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில்01.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.